www.tamilarangam.net

# களத்தில்

> "தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக் கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்துகொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும் அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெற முடியும்"
>
> தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (02.07. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (138) அன்பளிப்பு: 60 p

## 'கரும்புலிகள்' பத்தாமாண்டு நினைவுச் சிறப்பிதழ்

### கரும்புலிகள்

காலத்தால் செதுக்கப்பட்ட
சிலைகளல்ல – இவர்கள்
ஒரு காலத்தைச் செதுக்கிய சிற்பிகள்!

காற்றுக்கும் திசையினைக்
கற்றுக் கொடுப்பவர்கள்
கனவுகள் இவர்களுக்கில்லை
இவர்களே எதிரியின் கனவுகள்!

சூரியன் வந்து சுடுவதில்லை
வெப்பம் இவர்கள்
விழிகளின் உருவாக்கம்!

எதிரியின் எல்லைகள் – இவர்களின்
விளையாட்டுத் திடல்கள்!

மரணம் இவர்களை
தொடுவதற் கஞ்சும்.
கால்களில் விழுந்து மண்டியிடும்.

கரங்களில் கிடப்பது
துப்பாக்கிகள் அல்ல;
வரலாற்றின் நெம்புகோல்கள்!






கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள் – எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள் – எதிரியின் படைப் பலத்தை மனப்பலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்

# பெரியமடுவிலும் பாரிய தாக்குதல்

## ❒ 150க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலி - 200க்கு மேற்பட்டோர் படுகாயம்

## ❒ 120 மீ.மீ 'ஆட்டிலறி' பீரங்கி புலிகள் வசம்

## ❒ 85 போராளிகள் வீரச்சாவு

தாண்டிக்குளம், இராணுவ நடவடிக்கைத் தலைமையகத்தை வெற்றிகரமாகத் தாக்கி, சிங்களப் படையை நிலைகுலைய வைத்த விடுதலைப் புலிகள், பதினைந்து நாள் இடைவெளியில் சிங்களப் படையினர் மீது மற்றுமொரு பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

ஓமந்தையில் இருந்து புறப்பட்டு பெரியமடுவில் நிலைகொண்டிருந்த சிங்களப் படையினர் மீதே இவ்வதிரடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 24-06-97 அன்றிரவு, விடுதலைப் புலிகளின் அணிகள் சிறிலங்காப் படையினரின் சகல தடைகளையும் உடைத்து ஊடறுத்து பெரியமடு முகாமில் இருந்த 'ஆட்டிலறித் தளம், மற்றும் பதுங்கு குழிகளையும் தாக்கியழித்தனர்.

### படையினருக்கு மேலும் பேரிடி

தாண்டிக்குளம் தாக்குதலினால் வன்னிப் படையெடுப்பில் ஈடுபட்டுள்ள சிங்களப் படையினர் உளவியல் ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததுடன், மேற்கொண்டு முன்னேறுவதற்கு படையினர் பலர் பலத்த தயக்கம் காட்டி வந்தனர். இவ்வேளையிலேயே விடுதலைப் புலிகள் இப்பாரிய தாக்குதலை நடாத்தியிருந்தனர். இது படையினருக்கு மேலும் பேரிடியாகவே

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## மட்டக்களப்பு - திருமலையில்
# இரண்டு நாளில் 46 படையினர் பலி

தென்தமிழீழத்தில் சிங்களப் படையினர் மீதான அதிரடித் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். கடந்த 16-06-97 அன்று மட்டக்களப்பு புல்லுமலை தம்பாட்டி அதிரடிப்படை முகாமிலிருந்து கிடாரம்கோட்டம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அதிரடிப்படையினரும் ஊர்காவற் படையினரும் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்காகிய போது, 4 ஊர்காவல் படையினரும் 15 அதிரடிப் படையினருமாக மொத்தம் 19 பேர் அவ்விடத்திலேயே பலியாகியமை அறிந்ததே. இவ் அதிரடித் தாக்குதல்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# தமிழ்ப் பெண்கள் மீது புதுவகைச் சித்திரவதை
# யாழ். குடாநாட்டில் புதுவகைக் கெடுபிடிகள்

தமிழ்ப் பெண்களை முகாம்களுக்குக் கொண்டு சென்று அவர்களை பலவந்தமாக்கி 'கசிப்பு' எனும் உயிர்க்கொல்லிச் சாராயத்தை பருகும்படி சிறிலங்கா இராணுவம் உத்தரவிட்டு வருகிறது.

மட்டக்களப்பில் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட வசந்தராசா பவானி (14), கே. நாகமணி (18), இலட்சுமி (27) ஆகிய மூன்று இளம் பெண்கள் இவ்வாறு படையினரால் 'கசிப்பு'ப் பருக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டபின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ். குடா நாட்டிலும் சோதனைச்சாவடிகளைத் தாண்டும் பாடசாலை மாணவர்கள்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## துயர் துடைப்பு வாரம்
## 05 . 07 . 97 - 13 . 07 . 97

இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமையகத்திடமிருந்து (தமிழீழம்) கிடைக்கப்பெற்ற அறிக்கையும், மேலதிக விபரங்களும் உள்ளே....

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ''தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதிஉதவி வழங்குவது சர்வதேச மரபுச்சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாகக் கருதப்படமாட்டாது''

**-பார்பரா ஜக்மன்**

"தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு நிதி உதவி வழங்குவதோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி வழங்குவதோ சர்வதேச மரபுவழிச் சட்டத்தின் கீழ் (கனடிய அரசே இச் சட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது) சட்ட விரோதமாகக் கருதப்படமாட்டாது"

இவ்வாறு கடந்த 22-5-97 வியாழக்கிழமையன்று கனடா - ரொறன்ரோவில் இணைப்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற சுரேஷ் வழக்கு விசாரணையில், சுரேஷ் தரப்பில் தோன்றி வாதாடிய பிரபல சட்டத்தரணி பார்பரா ஜக்மன் தனது வாய்மூலத் தொகுப் புரையின் போது தெரிவித்தார். இவ்விசாரணையின்போது, நூற்றுக் கணக்கான மக்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த வழக்கு 52 நாட்களாக நடைபெற்றது. வேறு எந்த குடிவரவு வழக்கும் இவ்வளவு தூரம் நீண்ட நாட்களாக நடைபெறவில்லை.

1995ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் திகதி மாணிக்கவாசகம் சுரேஷ் கைது செய்யப்பட்டார். இருந்தும் கடந்த வருடம் மார்ச் மாதம் 20ஆம் திகதியே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கின் சாட்சியங்கள் நேரடியாகவும் ரகசியமாகவும் பெறப்பட்டன. ரகசியமாகப் பெறப்பட்ட சாட்சியங்களில் அரச தரப்பினரது சாட்சியங்களும் இடம் பெற்றன. சிறிலங்கா அரசின் எதிர் நடவடிக்கை காரணமாக ரகசியமாகச் சாட்சி வழங்க விரும்பியவர்களின் சாட்சியங்களும் பதிவுசெய்யப்பட்டன.

உலகின் பல பாகங்களில் இருந்து நிபுணத்துவச் சாட்சியங்கள் பெறப்பட்டன. பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், மற்றும் அரசியல் அறிஞர்கள் அவுஸ்த்திரேலியா, அமெரிக்கா, நோர்வே, இந்தியா, மலேசியா, சுவீடன், இங்கிலாந்து போன்ற பல நாடுகளில் இருந்து வந்து சாட்சியம் அளித்தனர். கனடாவில் இருந்தும் பலர் சாட்சியம் அளித்தனர்.

மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்கள் குடிவரவுச் சட்டம் 40.1 விதியின் கீழ் கைது செய்யப்பட்டபோது, அவர் பயங்கரவாதத்தில் ஈடுபடும் இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருந்தார் அல்லது இருக்கிறார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

இச்சட்ட விதியின் கீழ் இதுவரை பெரும்பாலும் மத்திய கிழக்கைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டார்கள்.

மே மாதம் 29, 30, 31 ஆகிய தினங்களில் நடைபெற்ற விசாரணையில், சுரேஷ் சார்பில் பிரபல சட்டத்தரணி பார்பரா ஜக்மன் தொகுப்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் பயங்கரவாதம் என்ற சொல் வரைவிலக்கணம் அற்றதொன்றாக இருக்கிறது என்பதையும், தெட்டத்தெளிவான வரையறை கொண்டதாக இல்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் வாதாடுகையில், பயங்கரவாதம் என்பதனை எல்லைப்படுத்தி அளவிடும் அளவிற்கு போதிய விளக்கங்கள் இல்லாதபோது, பொதுமகன் ஒருவரைப் பயங்கரவாதத்தில் ஈடுபடும் இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருந்தார் அல்லது இருக்கிறார் எனக் குற்றம் சாட்ட முடியாது என்றார்.

தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் சிறிலங்கா அரசினால் ஒடுக்கப்பட்டும், அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டும் இருக்கும் நிலை பற்றியும் அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இருப்பதையும் நீதிமன்றம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இவ்வழக்கில் அரச தரப்பில் தொகுப்புரை வழங்கிய சட்டத்தரணி வயலன்ட்கோட், "தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கம் என்றோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாதத்தில் ஈடுபட்டது என்றோ கனடிய தரப்பில் கூறப்படவில்லை. விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம் என நியாயமாக நம்பப்படுகிறது. (Reasonable believe) என்று மட்டுமே சொல்லியுள்ளது" என்று கூறினார். ✷

## கரும்புலிகளை நினைவுகூர்ந்து மக்கள் மலரஞ்சலி

தாண்டிக்குளம் தாக்குதலின்போது, வீரச்சாவடைந்த மூன்று கரும்புலிகளின் உருவப் படங்களும் அலங்கார ஊர்திகளில் வைக்கப்பட்டு வன்னியில் பொதுமக்களால் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன.

கரும்புலி மேஜர் நிதன்,
கரும்புலி மேஜர் யாழினி,
கரும்புலி கப்டன் சத்திரியன்
ஆகிய மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய அலங்கார ஊர்தி புதுக்குடியிருப்பு சிவன் கோவிலடியிலிருந்து உதயசூரியன் கலாமன்றம் நோக்கி கொண்டு செல்லப்பட்டன.

அவ்வேளையில், வீதியெங்கும் மக்கள் குழுமி நின்று இனத்தின் விடிவிற்காகத் தங்களை முழுமையாகவே அர்ப்பணித்துக் கொண்ட இம்மாவீரர்களின் உருவப்படங்களுக்கு கண்ணீர் சொரிய மலரஞ்சலி செலுத்தினர். இறுதியில், விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழக முல்லைத்தீவுப் பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில் அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது. ஏராளமான பொது மக்கள் தமது மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தத் திரண்டிருந்தனர். ✷

## 2000 தமிழ்க் குடும்பங்கள் பட்டினி நிலை 7099 குடும்பங்கள் இடம்பெயர்வு

வன்னியில் சிறிலங்காப் படையால் தற்போது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மக்களில் சுமார் 2000 குடும்பங்கள் எதுவித உணவு நிவாரணமுமின்றி பட்டினி வாழ்வுநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் ஓமந்தை, புளியங்குளம், நெடுங்கேணி, ஒட்டிசுட்டான் ஆகிய பகுதிகளில் இருந்து 7099 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. இதில் 5099 குடும்பங்களுக்கு சில நிவாரண உதவிகள் கிடைத்ததாகத் தெரிவிக்கும் மேற்படி செய்திகள், சுமார் 2000 குடும்பங்கள் இன்றுவரையில் எதுவித உணவு நிவாரணமும் இன்றி, மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளன. சிறிலங்கா வின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு, வன்னிப் பகுதி அதிகாரிகளால் விடுக்கப்பட்ட அவசர வேண்டுகோளையும் அவர் அலட்சியப்படுத்தியுள்ளார் என வன்னிச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. ✷

## ஆக்கிரமிக்கப்பட்ட யாழ். குடாவில் இளைஞர்கள் பிணமாக மீட்பு

### - சர்வதேச சட்டங்கள் பகிரங்க அவமதிப்பு

### - சிறிலங்கா ஜனாதிபதியின் இராணுவவாதப் பேச்சு

சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு தனிமையாக்கப்பட்ட யாழ். குடாநாட்டில், சர்வதேசச் சட்டங்களுக்கு முரணான வகையில் அப்பாவித் தமிழ் மக்கள் பகிரங்கமாக இனக்கொலை செய்யப்பட்டு தெருவோரங்களில் வீசப்பட்டு வருகின்றனர்.

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, மூளாய், பொன்னாலை பகுதிகளைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்கள் இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு தெருவோரங்களில் வீசப்பட்டுள்ளனர்.

பொதுமக்களை இனங்காணக்கூடிய அச்சத்துக்கு உள்ளாக்குவது சர்வதேச சட்டங்களினால் தடுக்கப்பட்ட ஒரு செயலாக இருந்தபோதிலும், சர்வதேச சட்டங்களுக்கு எதுவித மரியாதையும் கொடுக்காத சிறிலங்கா அரசு, தனது படைகள் இவ்விதம் நடந்து கொள்வதை உற்சாகப்படுத்தக் கூடியவகையிலேயே செயற்பட்டு வருகிறது.

இதேவேளை, உள்நாட்டு மக்களையும் உலகையும் ஏமாற்றும் நோக்கில், சமாதானப் புறாவாக மாறி சனாதிபதி பதவியைப் பெற்ற சந்திரிகா இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் பேசுகையில், இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் நசுக்கப்பட வேண்டும் எனவும் சிறிலங் காவின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு இதன் பிறகே எனவும் பேசி இராணுவவாதத்திற்கு மேலும் உற்சாகமும் உத்வேகமும் அளித்துள்ளார்.

இவ்வாறான பேச்சுக்கள் இன வெறி கொண்ட படையினரை மேலும் ஊக்குவிப்பதாகவே அமைகின்றன.

கடந்த 14ஆம் திகதி யாழ். குடாநாட்டில் அப்பையா ஜெயராசா என்ற வியாபாரியை யாழ். நகர் கன்னாதிட்டிச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொன்ற சிறிலங்கா இராணு வத்தினர், அவரின் உடலைப் பொறுப்பேற்க வந்த உறவினரிடம் அவர் 'பயங்கரவாதி என கையெழுத்திடுமாறு பயமுறுத்தியுள்ளனர். இதற்கு அவர்கள் உறுதியாக மறுத்த நிலையில், இறுதியாக அவரின் உடலை யாழ். வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். அவரின் படுகொலையைக் கண்டித்து மறைவுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் யாழ். சந்தைப் பகுதி எங்கும் கறுப்புக் கொடிகளையும் பொதுமக்கள் பறக்கவிட்டனர். ✷

## விமான நிலையத்தில் 22 தமிழர்கள் சிறிலங்காப் பொலிசாரால் கைது

சிறிலங்காவின் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து 22 தமிழர்கள் சிறிலங்காப் பொலிசாரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு பெண் உட்பட, கைது செய்யப்பட்ட மேற்படி 22 தமிழர்களும் வெளிநாடு செல்வதற்காக விமான நிலையத்தில் நின்ற வேளையிலேயே, சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 22 பேரும் விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் எனவும், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று நிதி திரட்டி அனுப்புமாறு பணிக்கப்பட்டு அனுப்பப்பட்ட விடுதலைப் புலிகள் எனவும் சிறிலங்கா பொலிஸ் குற்றம் சாட்டியுள்ளது. சிறிலங்காப் படையினர் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் வாழும் தமிழ் மக்களை எதுவித காரணகளுமின்றி, நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் கைது செய்து வருவது தெரிந்ததே. சில வாரங்களுக்கு முன்னர், பிரித்தானியாவில் இருந்து சென்ற ஒரு தமிழ்த் தம்பதியினரும் சந்திரிகாவின் வசிப்பிடத்தை உளவு பார்த்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நேற்று இன்று நாளை

**நே**ற்று தாண்டிக்குளத்தில் படித்த பாடத்தை, சிறிலங்கா இராணுவம் இன்று பெரியமடுவில் மீண்டும் படித்துள்ளது. நாளை தமிழீழத் தாயகமெங்கும் இதுவே சிறிலங்கா இராணுவத்தின் அனுபவமாகப் போகிறது.

யாழ். குடாநாட்டை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்த பின் தமிழீழத் தேசியத் தலைவர் விடுத்த மாவீரர் தினச் செய்தியில் "பெருந்தொகையான ஆளணி நகர்வையும் வகைதொகையற்ற சுடுதிறன் பிரயோகங்களையும் கொண்டு எங்கள் மண்ணை ஆக்கிரமிக்கலாம். ஆனால் எமது மண்ணே எம் மண்ணை ஆக்கிரமிப்பவர்களின் கல்லறைகளாக மாற்றப்படும்" என எச்சரித்தார். அந்த எச்சரிப்பின் உண்மைத்தனத்தை, முல்லைத்தீவு முகாம் தாக்குதல் சிறிலங்கா அரசுக்கு நன்கு உணர்த்தியிருக்கும். இருந்தும் மேலும் மேலும் ஆக்கிரமிப்பு முயற்சிகளைத் மேற்கொண்டு, அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதன் மூலம் – சித்திரவதைப்படுத்துவதன் மூலம் – வாழ்க்கை முறையை அழிப்பதன் மூலம் – தனது இராணுவ நலன்களை எய்திவிடலாம் எனப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது.

இந்த இனஅழிப்பின் – இனக்கொலைகளின் – இன அச்சுறுத்தல்களின் – சர்வதேச சட்டவிரோத தன்மையினையும், இதனால் தமிழீழ மக்கள் தமது சொந்தத் தாயக மண்ணிலேயே காலனித்துவம் உருவாக்கிய சிறிலங்கா அரசால் – நடைப்பிணங்களாக மாற்றப்படுவதையும் பலமுறை சர்வதேச அமைப்புகளுக்கும் நாடுகளுக்கும் எடுத்துக்கூறியும் பெரியளவில் சர்வதேச உதவி எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மை. இதற்குக் காரணம், சர்வதேச நாடுகள் வர்த்தகநல உறவுகளையும் இராணுவ வல்லாதிக்க இலக்குகளையும் மையமாக வைத்து இயங்குவதும், இவற்றுக்கு இலங்கைத்தீவு முழுவதையுமே இரையாக்கி "எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு அபசகுனம் ஆகட்டும்" என்ற போக்கில் சந்திரிகா அரசு செயற்படுவதுமே ஆகும்.

இந்நிலையில், எமது மக்கள் மீது சிறிலங்கா அரசும் அதன் கூலிப்படைகளும் மேற்கொண்டு வரும் கொடுமைகளையும் அழுத்தங்களையும் துடைத்தெறியும் தேசியப்பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தேவையான உதவிகளை உடன் வழங்குவதுடன், சிறிலங்கா மேற்கொண்டுவரும் அழித்தொழிப்பு நடவடிக்கைகளை சர்வதேச ரீதியில் தொடர்ந்தும் அம்பலப்படுத்துவதன் மூலமே நாம் சிறிலங்காவின் இனக்கொலைப் போக்கை ஒழிக்கலாம்.

"நம் கையே நமக்குத் துணை" என்ற நிலையில் தமிழீழ மக்களாகிய நாம், தாயகத்திற்கான உதவிகளை உடனடியாகவே விரைவுபடுத்த வேண்டும். எமது உணர்வின் தாக்கத்தின் ஊடாகவே, சமாதானத்திலும் சத்தியத்திலும் நம்பிக்கை உள்ள ஏனைய மக்களும் எம்முடன் இணைந்து செயற்படுவார்கள்.

நாம் எந்த அளவுக்கு, சந்திரிகா அரசு தமிழ் மக்களின் சமூக வாழ்வை மறுக்கிறது என சர்வதேச நாடுகளுக்கு பரப்புரை செய்கின்றோமோ, அந்த அளவுக்கு சந்திரிகா போடும் சமாதான முகமூடியையும் கிழித்தெறியலாம். எமது இனத்தின் இன்றைய அவலங்களையும் துடைத்தெறியலாம். ✷

# தார்மீகப் பலம் அற்றது

சந்திரிகா குமாரணதுங்க அரசு, நாட்டில் அவசரகாலச்சட்ட விதியினை முறைகேடான முறையில் பயன்படுத்துவதாக பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க குற்றஞ்சாட்டியுள்ளது. இக்குற்றச்சாட்டானது, சந்தேகத்திற்கு இடமற்ற ரீதியில் உண்மையாயினும், இவ்வாறானதொரு குற்றச்சாட்டினை ஐ.தே.கட்சி சுமத்துவது அது எந்தளவு யோக்கியதையானது என்பதே பலர் எழுப்பும் கேள்வியாகும். சிறிலங்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளில், மக்கள் ஆட்சி அதிகாரங்களை ஒரு கட்சியிடம் ஒப்படைக்கும் போது, மக்கள் தங்களை சர்வவல்லமை பொருந்தியவர்களாக அமர்த்தி விடுகின்றனர் என்றே ஆட்சிப்பொறுப்பினை ஏற்பவர்கள் கருதுகின்றனர். அடுத்த தேர்தல் வரும் வரைக்கும் எந்த அரசும், அதன் பாதுகாப்புக்கென ஆக்கப்பட்ட சட்டங்களும் தமக்கானவை என்பது அவர்களின் எண்ணம். இந்த வகையிலேயே கடந்த காலத்தில் சிறிலங்காவை ஆண்ட சகல ஆட்சியாளர்களும் நடந்து கொண்டனர். இதில் ஐ.தே.கட்சி என்றோ, அன்றிச் சதந்திரக் கட்சி என்றோ, அதன் கூட்டணி என்றோ எவையுமே வேறுபட்டவையானவை இல்லை. ஏன், தங்களை இடது சாரிகள் என்று முத்திரை குத்திக்கொண்டவர்கள் கூட, இதிலிருந்து விலக்குப்பெறவில்லை. மாறாகக் காலத்துக் காலம் ஆட்சிக்கு வரும்போது மக்கள் மீதோ, அன்றி தமது அரசியல் எதிரிக்ள் மீதோ அவர்களின் அழுத்தங்கள் அதிகரித்த வண்ணமே இருந்தன. இதில் தமிழர்கள், சிங்களவர்கள் என்ற வேறுபாட்டை அவர்கள் காட்டவில்லை. ஆனால் சிங்களவர்கள், தமிழர்கள் என்ற வேறுபாட்டைக் காட்டி சிங்களவர்களை ஏமாற்றினார்கள் என்று கூறலாம். ஏடுத்துக்காட்டாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஐ.தே.க கொண்டு வந்த போது இது தமிழர்களுக்கு எதிரான சட்டமாகவே கச்சிதம் செய்யப்பட்டது. இது அவ்வேளையில் உண்மையானதாக இருந்தாலும் கூட, பின்னர் சிங்களவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. அத்தோடு, இச்சட்டத்தினைக் கொண்டுவந்து அமுலாக்கிய ஐ.தே.கட்சியில் இருந்து தற்போது ஆட்சியில் உள்ள பொதுசன ஐக்கிய முன்னணி வரை, இலங்கையில் உள்ள சகலருக்கும் எதிராகப் பயன்படுத்தத் தவறவில்லை. இந்த வகையிலேயே அவசரகாலச் சட்டத்தை சிறிலங்கா ஆட்சியாளர் கையில் எடுத்துக் கொண்டுள்ளனர். இச்சட்டமானது, அதிகாரத்தில் உள்ளவர்களைச் சர்வாதிகாரிகள் ஆக்குவதற்கான அடிப்படைச் சட்டமாகும். இச்சட்டத்தின் மூலம் மக்களின் உரிமைகள் யாவும் பறிக்கப்படுவதற்கு ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இதன் மூலம் மக்கள் தமது சிவில் உரிமைகளை முற்றாக இழக்கவேண்டி இருக்கின்றது. அத்தோடு, ஆட்சியாளர்கள் தமது ஆட்சியதிகாரத்தை அடுத்த தேர்தல் வரையில் நிலைநிறுத்திக் கொள்ள உதவுகின்றது. இந்த வகையிலேயே கடந்த ஐ.தே.கட்சியின் ஆட்சியினை 17 வருடங்கள் வரை நீடிக்க முடிந்தது. இச்சட்டத்தின் மூலம் அரசியல் எதிரிகளைப் பழிவாங்கிய ஆட்சியாளர்கள், இதே சட்டத்தின் மூலம் மக்களின் சிவில் உரிமையைப் பறித்ததன் மூலம் தமது ஆட்சி அதிகாரத்தை

தொடர்ச்சி 17 ம் பக்கம்...

# இராணுவத்திற்கு மட்டுமல்ல

**தா**ண்டிக்குளத்தில் இருந்த சிறிலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது, 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்கு விடுதலைப் புலிகள் வழங்கிய பதிலடி. இராணுவத்திற்கு மட்டுமல்ல சந்திரிகா குமாரணதுங்காவின் இனப்பிரச்சனை குறித்த அணுகுமுறைக்கும் விடுதலைப்புலிகள் கொடுத்த பலமான அடியென்று கூடக் கூறலாம். சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்தும் 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதியான முன்னோக்கிய படை நடவடிக்கையாகும். அரசின் பாசையில் கூறுவதானால், ஏற்கனவே 80% முடிவடைந்து விட்ட போரை, இப்படை நடவடிக்கை முற்றாக முடிவுக்குக் கொண்டுவரும் என்பதாகும். இப்படை நடவடிக்கையின் மூலம் இனப் பிரச்சனைக்கான அரசின் அணுகுமுறை முடிவுக்கு வரும் என்பதே அவர்களின் பிரச்சாரமாகும். ஆனால், தாண்டிக்குளம் இராணுவ முகாமின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலும் அதனால் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய இழப்பும் அரசின் பிரச்சாரங்கள் அல்லது திட்டங்கள் யாவற்றையும் தவிடு பொடியாக்கிவிட்டது என்றே கூறலாம். அதாவது, புலிகள் எளிதில் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்ற பொய்யான மாயையைக்கூட அரசால் ஏற்படுத்தமுடியாமல் இத்தாக்குதல் தடுத்து விட்டது எனலாம். ஏனெனில், தாண்டிக் குளத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலானது, சந்திரிகா குமாரதுங்க அரசு இதுவரை விடுதலைப் புலிகள் குறித்து வெளியிட்டு வந்த கச்சிதத்தை உடைத்து எறிந்தது. 80% வீதம் போர் முடிவுக்கு வந்து விட்டது எனவும் புலிகள் தோற்கடிக்கப்படும் கட்டத்தில் இருக்கின்றனர் எனவும் அரசு கூறிக்கொண்டு இருக்கையில் பெரும் படையெடுப்பை நடத்திக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான துருப்பினரைக் கொண்ட படை அணியை, புலிகள் ஊடுருவித் தாக்கிப் பெரும் சேதத்தை விளைவித்தனர். இத்தாக்குதலானது, விடுதலைப் புலிகள் அமைப்பானது முன்னைய காலங்களை விட மிகவும் பலமான நிலையில் இருக்கின்றது என்பதை வெளிக்காட்டியுள்ளது. ஏனெனில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலானது, போர் முறையிலும் ஆற்றலிலும் புலிகள் முன்பைவிடப் பலமும் தேர்ச்சியும் பெற்றுள்ளனர் என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது. இந்த நிலையானது, புலிகள் எவ்விதத்திலும் பலவீனப்படுத்தப்படவில்லை என்பதோடு, இராணுவச் சமநிலையில் பெருமளவு மாற்றத்தைக் கொண்டுவர இராணுவத்தின் கை ஓங்கவில்லை என்பதையும் நிரூபித்தது. இதன் காரணமாக, இவ்வாண்டுக்குள் போர் முடிவும் என்பதும் புலிகளுக்கு எதிராக வெற்றி என்பதும் அர்த்தமற்றதாகும். இதேவேளை, விடுதலைப் புலிகளிடம் சரணடையாது ஆயுதக் களஞ்சியத்தைக் காப்பாற்றுவதற்காக இராணுவத்தினர் போராடினர் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கூறும் அளவுக்குப் புலிகள் தாக்குதலில் இராணுவம் தடுமாற வேண்டிய நிலையை உருவாக்கியது. இவ்வாறாக அரசின் இராணுவத்தீர்வு என்பது கேள்விக்குறி ஒன்றாக மாறி நிற்கும் நிலையில் அதன் அடுத்த வழிமுறையானது, அரசியல் தீர்வு என்ற ரீதியில் மேற்கொள்ள முனையும் அதிகாரப் பரவலாக்கல் திட்டமும் ஐயத்திற்குள்ளாவதில் பிழையில்லை. ஏனெனில், விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தில்

தொடர்ச்சி 17 ம் பக்கம்...

# திருடிய படையினரை படையினரே சுட்டுக் கொலை

சிங்களப் படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டில் தென்மராட்சிக் கிராமமான மட்டுவில் பகுதியில் சிங்கள இராணுவத்தால் மூன்று சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. மட்டுவிலில் உள்ள வீடொன்றுக்குள் இரவு 10 மணியளவில் சாதாரண உடையுடன் நுழைந்த சிங்கள இராணுவத்தினர் மூவர், அங்கிருந்த தாயையும், மகளையும் அறையொன்றில் பூட்டி விட்டு, அங்கிருந்த விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளையிட்டனர். பின் கொள்ளையிட்ட பொருட்களுடன் தமது முகாமுக்கு ஓடிச் சென்றுள்ளனர். அப்போது காவலரணில் நின்ற இராணுவத்தினர், ஊரடங்கு நேரத்தில் ஓடிவரும் இவர்களைக் கண்டவுடன் புலிகள் தான் தாக்குதல் நடாத்த வருகின்றார்கள் என்ற பீதியுடன், தமது சகாக்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவ்விடத்திலேயே மூன்று இராணுவத்தினரும் பலியாகியுள்ளனர். ◆

# மட்டக்களப்பு - திருமலையில்.....

நடைபெற்று மூன்று நாள் இடைவெளியில், 18-06-97 அன்று திருகோணமலை புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து 14ஆம் கட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ அணி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளானது. சுமார் 25 நிமிடங்களே நடைபெற்ற இத் தாக்குதலில் 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது 4 ஏ.கே.எல்.எம்.ஜி உட்பட பல ஆயுதங்கள், ரவைகள், இராணுவ உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில்,

லெப். கேணல் மாதவன் (சின்னையா விநாயகமூர்த்தி, கிளிநொச்சி)

கப்டன் முக்கண்ணன் (கந்தையா குருபரன், வேலணை)

லெப். இளம்குட்டுவன் (ஜீவரட்ணம் சங்கர்கணேஸ், ஆலங்கேணி)

லெப். திவாகர் (தங்கராசா அருள்தாசன், பூநகரி)

2ஆம் லெப். சுந்தரம் (தெய்வேந்திரம் மகேஸ்வரன், சங்கானை)

2ஆம் லெப். குணகுமார் (சிவசாமி ராமச்சந்திரன், மன்னார்) ஆகிய ஆறு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தாயகத்தில் இருந்து எதிரிப்படையை அகற்றும் புனிதப் போரில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து விட்ட இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம்.

இதேவேளை இத் தாக்குதல் நடைபெற்றபோது, புல்மோட்டை பொலிஸ் நிலையம் மீதும் விடுதலைப் புலிகள் 'ஆட்டிலறி' தாக்குதல் நடாத்தியதாகத் தெரிவிக்கும் ஏ. எப். பி செய்தி நிறுவனம், இதன்போது 12 சிங்களப் பொலிசார் கொல்லப்பட்டதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் அறிவித்துள்ளது. ✷

# பெரியமடுவிலும் பாரிய தாக்குதல்.............

விழுந்துள்ளது. தாக்குதல் தொடங்கியதும், அங்கு நிலை கொண்டிருந்த பெருமளவு இராணுவத்தினர் மரண பயத்துடன் தப்பியோடியதாயும் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், புலி வீரர்களின் அதிவேகப் பாய்ச்சல் தாக்குதலில் பல படையினர் தாம் நின்ற இடத்திலேயே மாண்டு போயினர். தாண்டிக்குளத் தாக்குதல் போன்று பெரியமடுத் தாக்குதலிலும் பெண் போராளிகளே பெரிதும் பங்கெடுத்துள்ளனர்.

சில மணி நேரமே நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். படையினர் இழப்புத் தொகையை மறைக்க சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சகம் பெரு முயற்சி செய்திருந்தது. இருப்பினும் சர்வதேச செய்தி நிறுவனங்கள் வடக்கிலுள்ள இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி 4 அதிகாரிகள் உட்பட 120க்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளன. சிறிலங்காப் படையினர் மேற்கொண்டுள்ள வன்னி நோக்கிய படையெடுப்பில் முதன்முதலாக கேணல் தரத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இப் பெரியமடுத் தாக்குதலிலேயே கொல்லப்பட்டுள்ளார் என ஏ. எப். பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் 200க்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்ததாயும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வெற்றிகரத் தாக்குதலின்போது 120 மீ.மீ. 'ஆட்டிலறி' பீரங்கி ஒன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதற்கான எறிகணைகளும் கைப்பற்றப்பட்டன. அத்துடன், இவ்வகை ஆட்டிலறிகளின் பாகங்கள் ஐந்தும் கைப்பற்றப்பட்டதுடன், சிறிய ரக ஆயுதங்கள், பெருந்தொகை ரவைகள், வெடிபொருட்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனை விட, பல இராணுவ வாகனங்களும் புலிவீரர்கள் வசமாகின.

இவ் வீரமிகு வெற்றிகரத் தாக்குதலில் 85 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். தாயகத்தை ஆக்கிரமிக்கும் எதிரிப் படையை விரட்டியடிக்கும் புனிதப் போரில் தம் இனிய இளைய உயிர்களை அர்ப்பணித்துவிட்ட இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம்.

## "படையைச் சிதறடிக்க புலிகள் போட்டி" -இந்தியன் எக்ஸ்பிரஸ்

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை இத் தாக்குதல்களை தனது கண்ணோட்டத்தில்,

"விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் தலைமையில் விடுதலைப் புலிகளின் பல படையணிகள், சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்கொண்டு முறியடிக்கத் தயார் நிலையில் உள்ளன. அத்துடன், சிறிலங்கா படையினர் மத்தியில் பெரும் சேதத்தை விளைவிப்பதில் விடுதலைப் புலிகள் தமக்குள் போட்டி போட்டுக் கொள்கின்றனர். தாண்டிக்குளம், ஓமந்தைப் பகுதிகள் மீதான தாக்குதலில் பெண்புலிகளே பெரும்பங்கு வகித்துள்ளனர்" என வர்ணித்துள்ளது.

## தாக்குதல் பற்றி ரொயிட்டர் செய்தி நிறுவனம்

இதற்கிடையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு அதிரடியிலும் சிறிலங்காப் படையினருக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதெனவும் இத் தாக்குதல்களின் விளைவாக, இராணுவ நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை 'ஐலண்ட்'யை ஆதாரம் காட்டி ரொயிட்டர் சர்வதேச செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தி சிறிலங்கா பாதுகாப்பமைச்சை விசனப்படுத்தியுள்ளது. இதனை அவசர அவசரமாக மறுத்த சிறிலங்கா பாதுகாப்பமைச்சு, படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்துவதாகவும் சாதகமான நேரத்தில் தரைநகர்வைத் தொடர்வர் எனவும் தெரிவித்துள்ளது.

## "கிழக்கில் அதிரடிகள் தொடரலாம்" -சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறை

விடுதலைப் புலிகளால் கிழக்கில் பெரும் தாக்குதல்கள் தொடரப்படலாம் என சிறிலங்கா இராணுவ புலனாய்வுத் துறையினர் அச்சம் தெரிவித்துள்ளனர். அத்துடன், விடுதலைப் புலிகளின் பெரும் படைபலத்தைக் கிழக்கிலிருந்து வன்னிக்கு இழுக்கும் நோக்கத்துடனேயே, படையினரின் தற்போதைய மோசமான நிலையிலும் இராணுவ நடவடிக்கையைத் தொடர சிறிலங்கா பாதுகாப்பமைச்சு பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பெரியமடு தாக்குதலுக்கு முதல் நாள் ஒரு டாங்கி அழிப்பு, 3 சேதம்

பெரியமடுத் தாக்குதலுக்கு முதல் நாள், தரைநகர முயன்ற படையினர் மீது ஆரம்ப நிலையிலேயே புலிவீரர்கள் தொடுத்த எதிர்த் தாக்குதலில் ஓர் டாங்கி முற்றாக அழிக்கப்பட்டதுடன், மூன்று டாங்கிகள் சேதமாக்கப்பட்டன. அத்துடன், ஒரு அதிகாரி உட்பட 14 இராணுவத்தினர் பலியாகினர். இத் தாக்குதல்களை சுட்டிக்காட்டும் வெளிநாட்டு செய்தித் தாபனங்கள், சஞ்சிகைகள் – விடுதலைப் புலிகளின் பலம், தாக்குதல் வலிமை அதிகரித்துக் கொண்டு செல்வதுடன், சிறிலங்கா படைத்தரப்பு இவற்றை தப்புக்கணக்கு போட்டு வருகிறது எனவும் இவ்வாறான கணிப்புகளால் தொடர்ந்தும் இத்தகைய சம்பவங்கள் தொடரும் எனவும் தெரிவித்துள்ளன. ✷

# தமிழ்ப் பெண்கள் மீது புதுவகை......

சிறிலங்கா இராணுவத்தினரால் கட்டாயப்படுத்தப்பட்டு மதுபானம் (கள்) பருக்கப்படுகின்றனர்.

அத்துடன் மதுக்கடைகளை திறந்தும் கசிப்புக் காய்ச்சும் நிலையங்களை உற்சாகப்படுத்தியும் சிங்களப் படையினரும், தமிழ்க் குழுக்களும் திட்டமிட்ட முறையில் மதுப்பழக்கத்தை தமிழ் மக்களிடையே குறிப்பாக இளம் பிள்ளைகளிடையே திணித்து வருகின்றனர்.

இதற்கிடையில் யாழ். குடாநாட்டில் வேட்டி அணியும் ஆண்கள் படையினர் முன் வேட்டிகளை மடித்துக் கட்டியிருந்தால் அதை அவிழ்த்து நீளக் கட்டும்படி கட்டாயப் படுத்தப்பட்டு அவமதிக்கப்படுகின்றனர். தலைப்பாகை அணிவது தடைசெய்யப்பட்ட நிலையில், தொழிலுக்கு- விவசாயத்திற்குச் செல்லும் தமிழ் மக்கள் கொளுத்தும் வெய்யிலிலும் தலையில் எதுவும் அணியாது செல்ல வேண்டியுள்ளது.

மேலும் வீதியோரத்தில் உள்ள வீடுகளின் மதில்கள், வேலிகளை அழிக்கவும் பொதுமக்கள் பணிக்கப்படுகின்றனர். மற்றும் வீடுகளில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும் எனவும் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

இத்துடன் மற்றுமொரு இராணுவச் சட்டத்தையும் அறிவித்துள்ளனர் அதாவது, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய புகைப்படம் வீட்டின் வாசலில் தொங்கவிடப்பட வேண்டும் என்ற கட்டளையே அது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள அதிரடிப் படையினரின் முகாமை அண்டியிருக்கும் பகுதிகளில் வாழும் மக்கள், படையினருக்கு கட்டாய பணிகள் ஆற்ற கட்டளையிடப்பட்டுள்ளனர். 16 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் அயலில் உள்ள முகாமுக்குச் சென்று அதிரடிப் படையினரின் உடைகளைத் துவைப்பதில் இருந்து அவர்களின் மலசலகூடத்தைக் கழுவுவது வரையிலான வேலைகளைச் செய்ய நிர்ப்பந்திக் கப்படுகின்றனர். மீறுவோர் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர்.

சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் இவ்வாறான தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள், தமிழ் மக்களை அடிமை வாழ்வுக்கே இட்டுச் செல்கின்றன. இவ் ஆக்கிரமிப்புப் படைகளை எம் மண்ணில் இருந்து விரட்டியடிக்கும் வரைக்கும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இந்நிலை தொடரவே செய்யும். ✷

# படையினரின் தாக்குதலில் பொதுமக்கள் ஐவர் படுகொலை

பனிச்சன் புளியங்குளம் பகுதியில் சிங்கள இனவெறிப் படை நடாத்திய வெறித்தனமான தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். இப் பயங்கர வாதத்திற்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இறந்துள்ளனர். சின்னத்துரை பொன்னுத்துரை (47) பொன்னுத்துரை மோகனதாஸ் (20) பொன்னுத்துரை காந்தரூபன் (16) கோபால் சசிக்குமார் (20) ஆசிரியர் காசிநாதன் குலநாதன் (33) ஆகியோரே சந்திரிகா அரசின் பயங்கரவாதத்திற்குப் பலியாகியுள்ளனர். ✷

www.tamilarangam.net



# தாண்டிக் குளத்திலோர் ஆண்டி! கொண்டு வந்தானொரு தோண்டி- அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!

நந்தவனத்திலோர் ஆண்டி_அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி_ அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

பதினெண் சித்தர்களில் ஒருவரான கடுவெளிச் சித்தர் பாடிய பாடல் இது.

இந்தப்பாடல் மிகவும் பிரபல்யமானது. இப் பாடல் மிகப் பெரும் புகழ் பெற்றதினால் இத்தகைய யாப்புக்கு ஆனந்தக் களிப்பு என்ற பெயரே தமிழ் இலக்கியத்தில் நிலைத்துவிட்டது.

நான் மறந்து விட்ட இந்த சித்தர் பாடலை எனக்கு இராணுவ வாதியும், அரசியல் வாதியுமான ஒருவர் ஞாபகப்படுத்தி இருக்கிறார்.

அவர் வேறு யாருமல்ல, துணைப் பாதுகாப்பு அமைச்சரும், இராணுவ ஜெனரலுமான அனுருத்த ரத்வத்தையே.

சாதாரண காலத்திலேயே தனதும், தனது



சிங்களப் படையினதும் வீர தீர பராக்கிரமங்களையிட்டு வாயோயாது சொல்லிக் கொண்டிருந்த துணைப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, "ஜயசிக்குறு" (வெற்றி நிச்சயம்) இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியபின் (மே 13ம் நாள்) அவரைப்பிடிக்கவே முடியவில்லை.

சிங்களப் படையின் வீரதீர பராக்கிரமங்களை அடுக்கிக் காட்டுவது வேறு. அமைச்சர் அப்படித்தான் பேசுவார், அப்படிப் பேசாவிட்டால் அவர் சிங்கள அமைச்சர் என்ற வரைவிலக்கணத்துக்கு அருகதையற்றவராகி விடுவார்.

ஆனால், அமைச்சர் விடுதலைப் புலிகளை இழித்துப் பழிப்பதில், அவர்கள் கதை முடிந்து விட்டதாக ஆர்ப்பரிப்பதில் ஒரு புதிய எல்லைக்கோட்டைப் பிடித்தார்.

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் 80வீத விழுக்காடு வெற்றி பெற்றுவிட்டோம், மீதி 20வீத

**- நக்கீரன் -**

விழுக்காட்டை இந்த ஆண்டு இறுதிக்குள் முடித்துவிடுவேன்"_என்று அமைச்சர் அனுருத்த ரத்வத்த் ஒருமுறை இருமுறையல்ல, பல முறை சொல்லிவிட்டார்.

கடந்த மூன்று வருடங்களாக வாயோயாமல் இந்தப் பல்லவியை ரத்வத்த பாடி வந்திருக்கிறார்.

ஆனால், வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததன் பின் ரத்வத்தயின் 'குடிகாரன் பேச்சு' எல்லை மீறிப்போனது.

> எதிரி எதிர் பார்த்ததை, எதிர்பாராதவிதமாக நடத்திக்காட்டுவதே தலைவர் பிரபாகரனின் தனித்துவம்.
>
> விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதலைப் பார்த்துவிட்டு, நாங்கள் கைதட்டினால் மட்டும் போதாது. தலைவர் பிரபாகரன் தன் தோளில் சுமக்கும் பளுவில் ஒரு விழுக்காட்டையாவது நாங்கள் சுமக்க முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவரது மறைவிடமான 4x4 தளத்தை (முல்லைத்தீவு) சிறிலங்கா இராணுவம் சுற்றி வளைக்கிறது" (The Srilankan Army is closing in Prabhakaran's 4x4 base at Mullaitivu) இப்படி ரத்வத்த தம்பட்டம் அடித்துக் கொண்டார்.

அத்தோடு அவர் நிறுத்திக் கொண்டாரா? இல்லவே இல்லை. அப்படி நிறுத்திக் கொள்வது சம்புமல்குமரயாவுக்கு அழகில்லையே! எனவே அவர் இன்னோர் அடி மேலே போய் எகிறிக் குதித்தார். நீர்ப்பாசன மின் சக்தி அமைச்சில் நடைபெற்ற செய்தி வெளியீட்டில், "ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கை பற்றிப் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார் என, "The Island" (08-06-97) பத்திரிகையின் பாதுகாப்பு நிருபர் எழுதியிருப்பதை அப்படியே தருகிறேன்:

Deputy Defence Minister Anuruddha Ratwatte underlined the government's beoyant mood over the success of 'operation Jaya Sikuru' when he publicly said that the Tigers were nothing but jackals now.

Addressing a news briefing at the Ministry of Irrigation, Power and Energy, General Ratwatte is reported to have said that heroic forces will Liberate the Tamil people of the North from the clutches of terrorists whom I now call Jackals and not Tigers anymore.

"ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கையின் வெற்றியால் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் மன மகிழ்ச்சியைத் துணை அமைச்சர் அனுருத்த ரத்வத்த வெளிப்படுத்தினார். அவர் சொன்னார், "புலிகள் புலிகளேயல்ல, அவர்கள் வெறுமனே நரிகள்."

நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சில் நடைபெற்ற செய்தி வெளியீட்டில் பேசிய ஜெனரல் ரத்வத்த, "எங்களது வீரப்படை வடக்கிலுள்ள தமிழ் மக்களை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிப்பார்கள். அவர்களை நான் இப்போது நரிகள் என்றுதான் அழைப்பேன். புலிகள் என்று இனி அழைக்கப்போவதில்லை."

ஜெனரல் ரத்வத்த களம் பல கண்ட இராணுவத் தளபதியல்ல. தொண்டர் படையைச் சேர்ந்த இவர், சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் கேணலாகப் பதவி உயர்வு பெற்றவர். அக்கா (சிறிமாவோ) தம்பி ரத்வத்தைக்கு வழங்கிய பதவி உயர்வு முறை கேடானது எனக் கூறி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் பதவி இறக்கம் செய்யப்பட்டவர்.

இப்போது, சந்திரிகாவின் ஆட்சியில்தான் மாமனுக்கு மருமகள் ஜெனரல் பதவி உயர்வு வழங்கியிருக்கிறார்.

"வடக்கில் உள்ள மக்களை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப் போகிறேன்" என்று ரத்வத்த கூறுகிறாரே, இவரை யார் அப்படி வெற்றிலை வைத்து அழைத்தார்கள் என்பது தெரியவில்லை.

ஒவ்வொரு ஆக்கிரமிப்பாளனும் இப்படித் தான் பேசியிருக்கிறான்.

ஜேர்மனியின் சர்வாதிகாரி கிட்லரும் போலந்து, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மீது படை எடுத்த போது "போலந்து, பிரான்ஸ் மக்களை கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவிக் கத்தான் இப் படையெடுப்பு" என்று சொன்னான்.

1958 ஆகஸ்டில் செக்கோஸ்லவக்கியா நாட்டைப் பிடிக்க செஞ்சேனையை அனுப்பி வைத்த ருஸ்சிய கம்யூனிஸ்ட்

> "வடக்கில் உள்ள மக்களை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப் போகிறேன்" என்று ரத்வத்த கூறுகிறாரே, இவரை யார் அப்படி வெற்றிலை வைத்து அழைத்தார்கள் என்பது தெரியவில்லை.
>
> ஒவ்வொரு ஆக்கிரமிப்பாளனும் இப்படித்தான் பேசியிருக்கிறான்.
>
> ஜேர்மனியின் சர்வாதிகாரி கிட்லரும் போலந்து, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மீது படை எடுத்த போது "போலந்து, பிரான்ஸ் மக்களை கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவிக்கத்தான் இப் படையெடுப்பு" என்று சொன்னான்.

ஆட்சியாளர்களும், "எதிர்ப் புரட்சி யாளர்களின் பிடியிலிருந்து செக் நாட்டு மக்களை விடுவிக்கவே இந்தப் படையெடுப்பு" என்றார்கள்.

அதற்கு முன் 1950இல் கங்கேரி நாட்டைப் பிடிக்க ருஸ்சியா செஞ்சேனையை அந்த நாட்டின்மீது ஏவிவிட்ட போது, "எதிர்ப்புரட்சி யாளர்களின் பிடியிலிருந்து கங்கேரி மக்களை விடுவிக்கவே படையெடுப்பு" என்று கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் அறிவித்தார்கள்.

எனவே கொடுங்கோலர்கள், எதிர்ப்புரட்சி யாளர்கள், பயங்கரவாதிகள் பிடியிலிருந்து



மக்களைப் பாதுகாக்கவே படையெடுப்பு, யுத்தம் என்று பேசுவது ஆதிக்கக் காரர்களதும், அதிகார வெறிபிடித் தவர்களதும் ஆணவக்காரர்களதும் கைவந்த கலையேயொழிய, வேறொன்றும் இல்லை.

"இலங்கைத் தீவு முழுவதும், சிங்களவர்களுக்கே சொந்தம்" என்ற மாயையை நிலைநாட்டவே 'ரிவிரச' தொடக்கம் 'ஜயசிக்குறு' ஈறாக படையெடுப்பு நடக்கிறது என்ற முழு உண்மையைச் சோற்றுக்குள் மறைக் கவே மாமா ரத்தவத்தையும் மருமகள் சந்திரிகாவும், "புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை விடுவிக்கவே இந்தப் படையெடுப்பு" என்று ஒரே குரலில் பாடுகின்றார்கள்.

இந்த இருவர் மட்டுமல்ல, சிங்கள-பௌத்த இனவாதத்தைத் தூக்கிப் பிடிக்கும் சிங்கள அறிவு பிழைப் பாளர்களும் இந்தப் பல்லவியைத்தான் பாடுகிறார்கள்.

"Driving a stake in to the Tigers heart"

"Forces put LTTE on the run"

"Tigers are loosing the war"

"3000 coffins have been readied by the LTTE"

"Operation 'Jaya sikuru' promised to deliver the coup de graoe"

"Operation "Jaya sikuru" to flush Tigers out of Vanni"

இவை கொழும்புப் பத்திரிகைகளான The Island, Sunday Leader, Sunday times

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

www.tamilarangam.net



# அமைச்சர் பீரிஸ் பேசும் அபத்தம்

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு குறித்து யார்தான் பேசாது விட்டாலும், அமைச்சர் பீரிஸ் அடிக்கடி பேசியவண்ணமே உள்ளார். இது அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சராக அவர் இருப்பதினாலோ அன்றி சிறிலங்கா அரசு இனப்பிரச்சனைக்கான தீர்வு யோசனையாக அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை வரைவதில் முக்கிய பங்கு வகித்தவர், வகித்து வருபவர் என்பதினாலோ கூடப் பேசலாம். அமைச்சர் பீரிஸ் எந்த அடிப்படையில் பேசினாலும் கூடத் தவறில்லை. ஆனால், அரசியல் தீர்வு குறித்தும், அதற்கும் யதார்த்தத்திற்குமான உடன்பாடு குறித்தும் அவர் பேசுவதுதான் அபத்தமாக உள்ளது. "இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான யதார்த்த நடவடிக்கைகள் தொடர்பான யோசனைகள், விரைவில் சமர்ப்பிக்கப்படும்" என்ற அவரின் பேச்சானது ஏனைய அரசியல்வாதிகள் போன்றே, பேராசிரியர் பீரிஸ்சும் அபத்தப் பேச்சில் சளைத்தவர் அல்ல என்பதை நிரூபிப்பதாக உள்ளது. ஏனெனில், இனப்பிரச்சனைத் தீர்வுக்கு யதார்த்த நடவடிக்கைகள் தொடர்பான யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதும் யதார்த்தத்திற்கு மீறியதான ஒரு அரசியல்வாதியின் பேச்சாகவே நிச்சயம் இருக்க முடியும். ஏனெனில், இன்றைய யதார்த்த நிலைக்கும் அரசியல் தீர்விற்கும் இடையில் நீண்ட இடைவெளி ஒன்று காணப்படும் நிலையில் எவ்வாறு இனப்பிரச்சனைத் தீர்விற்கான யோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

இவ்வாறான நீண்டதொரு இடைவெளி, இனப்பிரச்சனை தீர்விற்கோ அரசியல் தீர்விற்கோ உதவாத முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். இனப்பிரச்சனைத் தீர்விற்கும் அரசாங்கம் ஒரு யோசனையை முன்வைத்ததாயினும், அதில் அரசாங்கத் தரப்பு உறுதியாக இல்லாமை இருப்பதைச் சுட்டிக்காட்ட முடியும். அரசியல் தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் முன்னதாக அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரதான எதிர்க்கட்சியுடன் உடன்பாட்டுக்கு வரமுடியாத ஆளும் கட்சியினால் பாராளுமன்றத்தில் எவ்வாறு அதே கட்சியுடன் உடன்பாடு காண முடியும்? அதாவது யதார்த்த பூர்வமான யோசனைகள் அடங்கிய தீர்வுத்திட்டத்தை, ஆளும் கட்சியினால் எவ்வாறு கொண்டுவர முடியும்? சிலவேளை ஐ.தே.கட்சியின் முழுமையான யோசனைகளை ஏற்றுக்கொள்வதினால் யதார்த்த பூர்வமான ஒரு நடவடிக்கைக்கு வந்துள்ளதாக ஆளும் கட்சி கூற முனைந்தாலும் கூட, இனப்பிரச்சனைக்கு அரசியல்தீர்வு என்ற ரீதியில் இதனால் பயனெதுவும் விளையுமா? அரசாங்கத்தால் அமுல்படுத்தத்தான் முடியுமா? அதாவது இவ்வாறான அமுலாக்கத்துக்கு வடக்குக் கிழக்கில் இன்றுள்ள நிலை சாத்தியமானதா? இதற்கு இன்றைய அரசியல் – இராணுவ யதார்த்தம்தான் இடம் கொடுக்குமா? அதாவது வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைக்க முடியாத எந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் அமுல்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில், யுத்தம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கையில் அதிகாரப் பரவலாக்கல், அது புதியதாயினும் சரி திட்டமொன்று நடைமுறைச் சாத்தியமானதல்ல. அது சாத்தியமாக வேண்டுமானால், முதல்படியாக யுத்தம் நிறுத்தப்படவேண்டும். அவ்வாறு யுத்தம் நிறுத்தப்படுவதினால் போராடும் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படவேண்டும். ஆனால், ஆளும் கட்சி தனது யோசனைகளை நிறைவேற்றினாலோ, அன்றி ஐ.தே.கட்சி சிபார்சை ஏற்று அரசியல் பரவலாக்கல் திட்டத்தை பாராளுமன்றத்தில் சட்டமாக்கினால் கூட, அரசியல் தீர்வு அமுலாக்கத்திற்கு ஏற்ற யதார்த்த நடவடிக்கையாக அது ஒருபோதும் இருக்க மாட்டாது. அதாவது அந்த நிலையிலும் யுத்த நிறுத்தமின்றி தீர்வு யோசனைகள் தமிழ் மக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்க முடியாது. இந்த நிலையில்தான் பேராசிரியர் பீரிஸின் பேச்சானது அபத்தமாக வெளிப்படுகின்றது. அதாவது, எந்தவிதத்திலும் எவருடனும் இணக்கப்பாடு ஒன்று காணப்படாத விடயத்தில் யதார்த்த நடவடிக்கைகள் தொடர்பான யோசனைகளை உருவாக்குவது என்பது எந்த வகையில் சாத்தியமானதாகும். இதுவே பேராசிரியரையும் முழுமையான அரசியல்வாதிகள் பட்டியலில் இணைத்து விடுகின்றது.

**நன்றி : ஈழநாதம்**

# ஆட்பலம் மட்டுமல்ல

சிறிலங்கா அரசு நினைப்பதுபோல், உறுப்பினர்களைத் திரட்டுவதில் புலிகளுக்கு எவ்வித சிரமமும் இல்லை. விடுதலைப் புலிகளின் ஆட்பலத்தில் அரைப்பங்கையே சிறிலங்கா அரசு மதிப்பீடு செய்துள்ளது. இது சர்வதேசப் பத்திரிகை ஒன்றின் கூற்றாகும். இக்கணிப்பீடானது, விடுதலைப் புலிகளின் ஆட்பலம் குறித்த விடயத்தில் மட்டுமல்ல, மற்றைய விடயங்களுக்கும் பொருத்தப்பாடானது. ஒரு யுத்தகள நிலைமையை தனியாக ஆட்பலமோ அதைவிடக்கூடிய ஆயுதபலமோதான் நிர்ணயிக்கின்றன என்று திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது. அவ்வாறு ஆட்பலமும் ஆயுதபலமும்தான் நிர்ணயிப்பனவாக இருப்பின், ஆட்பலம் கூடிய இராணுவங்கள் மட்டுமே போரில் வெற்றிபெற முடியும். ஆனால், வரலாறு அவ்வாறு தெரிவிக்கவில்லை. வேறுபல காரணிகளும் போரட்டத்தை நிர்ணயிக்கின்றன. சில சமயத்தில் மட்டும் ஆயுதபலமும் அதைவிடக்கூடிய ஆட்பலமும் யுத்தகளநிலையை சாதகமாக முடிவு செய்ததுண்டு.

இந்த வகையிலேயே விடுதலைப் புலிகளுடனான போரில், சிறிலங்கா இராணுவத்திற்கு வெற்றி தோல்விகளும் தீர்மானிக்கப்படுபவையாக இருந்து வந்திருப்பின், புலிகளின் ஆட்பலத்தை இராணுவத்தரப்பு சரியாக மதிப்பிட்டு இருப்பின் சிலவேளைகளில் போர்க்களத்தில் இராணுவத்திற்கு அனுகூலம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், புலிகளுடனான போரில் ஆட்பலம் முதன்மையான ஒன்றல்ல. அவ்வாறு இருந்திருந்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய இராணுவத்துடன் ஒரு போராட்டத்தை நடத்துவதற்கு முடிவு செய்திருக்க மாட்டாது. ஏனெனில், இந்திய இராணுவத்துடன் முழு எண்ணளவிலான நிலையில் ஒப்பிடக்கூடியளவு ஆட்பலம் புலிகளிடம் இருக்கவில்லை. ஆயினும், புலிகள் இந்திய இராணுவத்துடன் மோதுவதற்கு ஆட்பலம் முக்கியமானதாக இருக்கவில்லை என்பது தெளிவு. இதனை இந்திய இராணுவத் தளபதிகள்கூட நன்கு புரிந்து கொண்டிருந்தனர். இதனையொட்டி அவர்கள் கருத்துக்களும் வெளியிட்டிருந்தனர். முக்கிய „அம்சங்களாக புலிகளின் மனோபலம், அவர்களின் இலட்சியப்பற்று, போரிடும் திறன் என்பனபற்றி வெகுவாகவே பாராட்டுக்களும் செய்திருந்தனர்.

ஆனால், இலட்சியப்பற்று, போரிடும் திறன் என்பனபற்றி விளங்கிக் கொள்வதற்கும், விமர்சனம் செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் தனியாக இந்திய இராணுவத்துடன் மட்டும் அவர்கள் போரிட்டமைதான் உதாரணம் என்றில்லை. சிறிலங்கா இராணுவத்துடன் அவர்கள் சளைக்காது சுமார் பதினைந்து வருடங்களாகப் போரிடுவதைக்கூட எடுத்துக்காட்டாகக் கொள்ளமுடியும். முன்னர் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருந்த காலத்தில் இருந்தும் சிறிலங்கா இராணுவத்தினால் வெற்றிகொள்ள முடியாமல்போய் இன்றைய சூழ்நிலை உருவாகியுள்ளமை தெளிவான உதாரணமாகும்.

இதில் மனோபலம் என்பதை, அவர்கள் மலையென வந்த எதிர்ப்புக்களையும் எதிர்கொள்ளத் தயாராகி நின்றதிலிருந்து விளங்கிக்கொள்ள முடியும். மிகப்பெரிய இராணுவ அச்சுறுத்தலைக்கண்டும் அவர்கள் அச்சமுறாத குணஇயல்புகளைக் கொண்டிருந்தது இதற்கு இன்னுமொரு உதாரணமாகும். ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக அடிப்படையாகவும் உரமூட்டுவதுமாக இருப்பது, விடுதலைப் புலிகளின் தலைமைத்துவமாகும். மிகவும் செயற்திறன்மிக்க, இலட்சியத்தில் உறுதிமிக்க விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் எந்தவித நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்கதுமட்டுமல்ல, எந்தவிதமான நெருக்கடியில் இருந்தும் மீட்டெடுத்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல்மிக்கதுமாகும். இந்த வகையில், விடுதலைப் புலிகளின் ஆற்றல் என்பது தனியாக ஆட்பலம், ஆயுதபலம் என்பதுடன் சம்பந்தப்பட்டது என மதிப்பீடு செய்தல் தவறானது ஆகும்.

அதன் பலம் போராளிகளின் இலட்சிய உறுதி, மனோபலம், போரிடும் ஆற்றல் என்பவற்றுடன் நேரடித் தொடர்பு கொண்டது. இதற்கு அடிப்படையாக இருப்பது, விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் உறுதியும் விடாமுயற்சியும் தலைசிறந்த வழிநடத்தலுமே ஆகும். அதாவது, இன்று உலகில் உள்ள சிறந்தவொரு போராளி இயக்கமாக விடுதலைப் புலிகளை உருவாக்கிய பெருமை, அதன் தலைமைத்துவத்தையே சாரும் எனின் அது மிகையில்லை.

**நன்றி : ஈழநாதம்**

# தமிழ்க் கூலிக்குழுக்களின் மர்மக் கொலைகள் தமிழ் மாணவிகள் கைது

மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் சிங்களப் படையுடன் சேர்ந்து, தமிழ்க்கூலிக் குழுக்களும், மர்மக் கொலைகளை நடாத்தி வருகின்றன. இவர்களால் கடத்தப்பட்டு காணாமல் போகும் பொதுமக்கள் பின்னர் சடலங்களாகவே மீட்கப்படும் துயரச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சத்துருக்கொண்டான் குடியேற்றத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சுந்தரமூர்த்தி எனும் இளைஞன் இக் கும்பலால் கடத்தப்பட்டு யூன் மாத நடுப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேலும், சந்திவெளியில் வைத்து வேல்முருகு ராஜ்மோகன் (18), 3 பிள்ளைகளின் தந்தையான தட்சணாமூர்த்தி (24), கந்தையா புவேந்திரராஜா (22) ஆகிய மூன்று பொதுமக்களும், கந்தையா சண்முகம், பண்டா தங்கவேல், கே. செல்வநாயகம் ஆகிய மூன்று விவசாயிகளும் வயலுக்கு நீர் பாய்ச்ச வெலிக்கந்தைக் குளத்திற்குச் சென்றவேளை சிங்களப் படையால் கைதுசெய்யப்பட்டனர். இவ் ஆறு அப்பாவி பொதுமக்களும் தற்போது காணாமல் போயுள்ளனர். வழமைபோலவே படையினரால் இவர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்பு படுவான்கரையைச் சேர்ந்த பாடசாலை மாணவிகள், விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளுவதற்காகத் திருகோணமலை சென்றவேளையில், சிறிலங்காப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கிழக்கில் தமிழ்ப்பெண்கள் மீது சிங்களப் படையினர் மேற்கொண்டுவரும் பாலியல் வன்முறை நடவடிக்கைகள் அதிகரித்துவரும் இவ்வேளையில், இம் மாணவிகள் கைதுசெய்யப்பட்டது குறித்து இவர்களின் பெற்றோர்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

மேலும் யாழ். குடாநாட்டுப் பகுதியில் கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம், களுத்துறை எனக் கொண்டு செல்லப்படும் தமிழ் இளைஞர்கள், யுவதிகளில் சிலர் கடும் சித்திரவதைகளின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர். அப்பகுதி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட இவர்கள், மீண்டும் தமது குடும்பத்துடன் இணைய வகையற்றவர்களால் அநுராதபுரம், களுத்துறைப் பகுதிகளில் அநாதரவாக விடப்பட்டுள்ளனர். 'பயங்கரவாதிகள்' என மீண்டும் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்படலாம் என இவர்கள் அஞ்சுகின்றனர். ✱

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து விலகியது நியாயமே!

**- சிறிலங்கா தேசிய சமாதானப் பேரவையின் பிரமுகர் ஜெகன் பெரேரா**

**சிறிலங்காவிலிருந்து வெளிவரும் "ஞாயிறு தினக்குரல்" (25-05-97) இதழுக்கு சிறிலங்கா தேசிய சமாதானப் பேரவையின் பிரமுகர் ஜெகன் பெரேரா வழங்கியிருந்த செவ்வியிலிருந்து........**

**அரசிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகள் (பேச்சுவார்த்தைகள்) ஏன் முறிவடைந்தன என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

இரண்டு முக்கிய காரணங்களால் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன என்று நான் கருதுகிறேன்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்ற போது அரசு உண்மையில் சரியான முன்னேற்பாடுகளுடன் செல்லவில்லை. இது பேச்சுவார்த்தை முறிந்தமைக்கான முக்கிய காரணமாகும். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவைப் பொறுத்தவரை, அவர் உயர்மட்ட அரசியலுக்கு மிகவும் புதியவர். மிகவும் குறுகிய காலப் பகுதிக்குள் உயர் மட்டத்திற்கு வந்தவர். பதவிக்கு வரமுன்பு அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் போட்டி போட வேண்டி இருந்தது. அதற்கு முன்னர், அந்தப் போரட்டத்திலேயே அவர் தனது காலத்தைக் கழிக்க வேண்டியிருந்தது. அவருடன் உயர் பதவிகளுக்கு வந்த பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் போன்றவர்களும் திடீரென உயர் அரசியல் பதவிகளுக்கு வந்தவர்களே. ஜே. ஆர். ஜெயவர்த்தன போன்றவர்களைப் போன்று பலகாலம் அரசியல் அனுபவம் பெற்றதன் பின்னர் உயர் பதவிக்கு வந்தவர்கள் அல்ல. அப்படி திடீரென அரசியல் உயர் பதவிக்கு வந்த அவர்களால், ஒரு அரசியல் உயர்மட்டத் தலைவருக்குள்ள பக்குவத்துடன் பிரச்சனைகளை அணுகத் தெரிந்திருக்க வில்லை. ஒரு சாதாரண பிரஜையின் நோக்கிலேயோ அல்லது கல்வியியலாளர் ஒருவரின் நோக்கிலேயோ அவர்கள் இந்தப் பிரச்சனைகளை நோக்கியிருந்தாலும், அரசியல் தலைவருக்கு உரிய நோக்கில் அவர்களால் நோக்கத் தெரிந்திருக்கவில்லை.

அப்படியான சூழ்நிலையில் பல காலப் போராட்டத்தைச் சந்தித்த வலுவான கொள்கைப் பிடிப்புள்ள விடுதலைப் புலிகள் போன்ற ஒரு அமைப்புடன், குறிப்பாக பல வருடகால பழமை வாய்ந்த தமிழர் பிரச்சனையை முன்வைத்து, பல பிரச்சனைகளுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைக்கு வந்த அந்த அமைப்புடன், போதுமான முன்னேற்பாடுகள் எதுவுமின்றி இலங்கை அரசு பேச நேர்ந்தது. இது பிலிப்பைன்சில் ஏற்கனவே ஏற்பட்ட ஒரு சூழ்நிலைக்கு ஒப்பானது. முன்பு பிலிப்பைன்ஸ் சனாதிபதி அக்கியுனோ தெரிவு செய்யப்பட்டபோது போதிய அனுபவமும் முன்னேற்பாடுகளுமின்றி அவர் போராளிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். அவை தோல்வியடைந்தன. அந்த நிலையே சந்திரிகாவிற்கும் ஏற்பட்டது.

பேச்சு முறிவதற்கான இரண்டாவது காரணம் மிகவும் சிக்கலானது. சிங்கள, தமிழ் முரண்பாட்டின் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. சிங்கள அரசும் வெளிநாடுகளும் இலங்கை மக்கள் ஒரே வகையினர் என்று கூறுகின்றனர். ஆனால், உண்மை இதற்கு மாறானது. இலங்கையர்கள் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. இங்கு ஒன்றிற்கு மேற்பட்ட சமூகங்கள் உள்ளன. இங்கு சிங்களவர் பெரும்பான்மையினராகவுள்ளனர். அவர்கள் அரசாங்கத்தை உருவாக்கலாம். ஆனால், அவர்கள் தமிழர்கள் மீது தமது தீர்மானங்களைத் திணிக்க முடியாது. அதற்கு, சனநாயகம் என்று காரணம் காட்ட முடியாது. (பெரும்பான்மை) காரணமாக, சிங்களவர்கள் உயர்வானவர்கள் என்றும் தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்றும் கணிப்பது தவறு. அவர்களைச் சம அந்தஸ்து உள்ளவர்களாகக் கருதி, அவர்களது பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை தமக்குச் சமமான ஒரு சமூகத்தின் பிரதிநிதிகள் என்று கருதி அரசு பேச்சை ஆரம்பித்திருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அரசு பதவிக்கு வந்திருந்தாலும், தாம்தான் நாட்டு மக்கள் அனைவரினதும் பிரதிநிதி என்றும் விடுதலைப் புலிகள் இரண்டாம் பட்சமானவர்கள் என்றும் கருதி அரசு செயற்பட்டது அரசின் தவறு. இது பெரும்பான்மை – சிறுபான்மை பிரச்சனை அல்ல. இரண்டு சம அந்தஸ்து உள்ள சமூகங்களுக்கிடையிலான பிரச்சனை. அதனை அங்கீகரிக்க அரசு தவறிவிட்டது. இந்தப் பிரச்சனை இலங்கையில் மட்டும் உள்ளதல்ல. கனடாவிலும் இதே நிலைதான். அங்கு ஆங்கிலேயர் 75சதவீதமாகும், பிரெஞ்சுக் கனடியர் 25 வீதமானவர்களாவர். கியூபெக் மாநிலத்தில் வாழும் 25 வீதமான பிரெஞ்சுக் க்னடியரும் அவர்களுக்கு எவ்வளவோ உரிமைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தாம் கனடாவில் ஏனைய பகுதிகளிலுள்ள ஆங்கிலேயருக்குச் சமமானவர்கள் என்றே கோருகின்றனர்.

அந்த வகையில் பேச்சுவார்த்தைகளின் போது, தம்மை சம அந்தஸ்து உள்ள ஒரு சமூகத்தின் பிரஜைகளாக அரசு கருதவில்லை என்பதை உணர்ந்த விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டு சென்று விட்டனர். தம்மை சம அந்தஸ்துடன் அரசு மதிக்காது, கெரில்லா இயக்கம் என்ற வகையில் மாத்திரம் அரசு பார்ப்பதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. இப்படியான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகள் இழுத்தடிக்கப்படும் போது அவர்களது கோரிக்கைகள் திசை திருப்பப்பட்டிருக்கலாம். அதனாலேயே, அவர்கள் உடனடியாகப் பேச்சை முறித்துக் கொண்டு போர்முனைக்குத் திரும்பினர்.

**விடுதலைப் புலிகளின் விசனத்தில் தவறில்லை**

ஏனைய தமிழ் அமைப்புக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட, தமிழர்களுக்காகச் சுதந்திரமாகக் குரல்கொடுக்க முடியாமல் அரசின் பாதுகாப்பிலிருக்கும் சூழ்நிலையில், தமிழ் மக்களால் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படாதவர்களாக இருந்தாலும் அவர்களுக்காகச் சுதந்திரமாகக் குரல் கொடுக்கக்கூடிய விடுதலைப் புலிகள், தம்மைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக அரசு சமமாக மதிக்கவில்லை என்பதில் விசனம் கொண்டதில் தவறில்லை.

**தமிழ் மக்கள் இங்கு சிறுபான்மையினராக இருக்கும் சூழ்நிலையில், பெரும்பான்மைச் சிங்களவர்களுக்குச் சமமானவர்களாக அவர்களை உறுதிப்படுத்த என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்?**

அதற்குப் பல வழிகள் உண்டு. அதிகப்படியான பிரதிநிதித்துவம் (Over Representation) மூலம் அதனை உறுதிப்படுத்தலாம். அது மட்டுமன்றி, தமக்கு எதிரான விடயங்கள் இடம்பெறும்போது அதனைத் தடுப்பதற்கான சிறப்பு அதிகாரம் சிறுபான்மையினருக்கு வழங்கப்படலாம்.

அதிகாரப் பரவலாக்கம் மூலம் தமது சொந்தப் பிராந்தியங்களில் சிறுபான்மையினர் அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும் அதற்கு உதவும். அதே வேளை, மத்திய அரசின் நடவடிக்கைகளில் சிறுபான்மையினருக்கு எதிரான முடிவுகள் மேற்கொள்ளப்படும்போது அதனைத் தடுப்பதற்கான 'வீட்டோ அதிகாரம்' சிறுபான்மையினருக்கு வழங்கப்படவேண்டும். பெரும்பான்மையான அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்படும் போது, நாடு பிளவுபட்டுப் போகலாம் என்ற பயம் பெரும்பான்மையினருக்கு எழுமானால், அதிக அதிகாரங்களை மத்தியில் வைத்துக்கொண்டு தமக்கு எதிரான நடவடிக்கைகளைத் தடுக்கும் 'வீட்டோ அதிகாரத்தை' சிறுபான்மையினருக்கு வழங்கவேண்டும்.

பாதை திறப்பதற்கான இந்தப் போரில் அரசு புலிகளைப் பலவீனப்படுத்தினாலும் சமாதானம் உருவாகுமென்றோ அல்லது அவர்கள் பேச்சுக்கு வருவார்களென்றோ எதிர்பார்க்க முடியாது. அது மட்டுமல்ல, காடுகளில் இடம்பெறும் போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் பலம் வாய்ந்தது என்பதையும் அரசு கருத்திற்கொள்ள வேண்டும். பலமான நிலையில் இருந்துகொண்டு சமாதானப் பேச்சைத் தொடருவதையே விடுதலைப் புலிகள் விரும்புவார்கள். அதுமட்டுமல்ல இராணுவத்தால் அவர்களைப் பலவீனப்படுத்த முடியாது. மொத்தத்தில் இந்த நிலையால் மக்களே துன்பப்படுவார்கள்.

**போர் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், சமாதானத்திற்கான அடுத்தகட்ட நடவடிக்கையாக எது அமையும்?**

பாதை திறப்பதற்கான இந்தப் போரில் அரசு புலிகளைப் பலவீனப்படுத்தினாலும் சமாதானம் உருவாகுமென்றோ அல்லது அவர்கள் பேச்சுக்கு வருவார்களென்றோ எதிர்பார்க்க முடியாது. அது மட்டுமல்ல, காடுகளில் இடம்பெறும் போரில் விடுதலைப் புலிகள் இயக்கம் பலம் வாய்ந்தது என்பதையும் அரசு கருத்திற் கொள்ள வேண்டும். பலமான நிலையில் இருந்துகொண்டு சமாதானப் பேச்சைத் தொடருவதையே விடுதலைப் புலிகள் விரும்புவார்கள். அதுமட்டுமல்ல இராணுவத்தால் அவர்களைப் பலவீனப்படுத்த முடியாது. மொத்தத்தில் இந்த நிலையால் மக்களே துன்பப்படுவார்கள்.

உண்மையில் தேர்தல்மூலம் தெரிவு செய்யப்பட்டு வந்தவர்கள் என்ற வகையில் உறுதியான தீர்வு பற்றி ஆலோசிக்க வேண்டும். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஒரு கெரில்லா இயக்கம் என்றவகையில் அவர்களது பலம் போரில்தான் உண்டு. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வரும்போது அவர்களது கோரிக்கைகள் ஐதாக்கப்படும்.

சமாதான மேடையில் அவர்களுடன் பேசும் அரசு, அவர்கள் மீது தந்திரத்தைப் பிரயோகித்து அவர்களது கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்யலாம். இந்த நிலைக்கும் பிலிப்பைன்ஸ் அனுபவம் உதாரணமாகக் காட்டப்படலாம். இந்த நிலையை விடுதலைப் புலிகள் உணர்ந்துள்ளதால் சரியான உத்தரவாதங்கள் வழங்கப்படாவிட்டால் அவர்கள் சமாதானப் பேச்சுக்கு வரமாட்டார்கள். அவர்கள் தொடர்ந்தும் போரிடவே செய்வார்கள். இதற்கு முடிவே கிடையாது.

**இதற்கு மாற்றாக 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் அமையலாமா?**

இருதரப்பும் விரும்பும் பட்சத்திலேயே 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் இதற்கு மாற்றாக அமையலாம். அதற்கும் முன்பாக மக்களின் இன்னல்களைக் கருத்திற்கொண்டு இருதரப்பும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட முன்வர வேண்டும். இந்நிலையை இருதரப்பும் ஏற்பார்களானால் 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் உதவலாம். அதற்கான மனோநிலையை இருதரப்பும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் பிரித்தானியா முயற்சித்து சந்திரிகா–ரணில் ஒப்பந்தம் ஏற்பட்டபோதும், பிரித்தானியா வெளியேறிய பின்னர் அவர்கள் இருவரும் தமது ஒப்புதலுக்கு மாறாகச் செயற்பட நேர்ந்த நிலையே உருவாகும். அவர்கள் மனம் விரும்பி இதனைச் செய்ய முற்படாமல் பிறர் வேண்டுகோளுக்காக ஒப்புதலுக்கு வந்து, பின்னர் அதனைக் கைவிட்டனர்.

**ஏனைய நாடுகளின் உள்விவகாரத்தில் இந்தியா தலையிடாது என்று இந்தியப் பிரதமர் குஜ்ரால் கூறுகிறாரே........?**

குஜ்ராலுக்கு அப்படி ஒரு திறந்த எண்ணம் இருக்கலாம். ஆனால், இந்திய நிலைப்பாட்டைத் தீர்மானிக்கப் போவது அங்குள்ள அரச இயந்திரமே. அது குஜ்ராலில் மாத்திரம் தங்கியிருக்கப் போவதில்லை. இலங்கை விவகாரம் இந்திய நலன்களுடன் பெரிதும் தொடர்புபட்டிருப்பதால் இந்திய நிலைப்பாடு விரைவில் மாறும். ✷

நன்றி : உலகத்தமிழர்

www.tamilarangam.net



# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்


## இத்தாலியில் மாவீரர் சுற்றுக்கிண்ண விளையாட்டுப்போட்டி-97

**1997**ஆம் ஆண்டுக்கான மாவீரர் சுற்றுக்கிண்ண விளை யாட்டுப்போட்டி 04-05-97 இல் இத்தாலி பலெர்மோ நகரில் பிற்பகல் 2.30 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியேற்றல், திலீபன் கல்விநிலைய மாணவர்களின் அணிவகுப்பு, பாடசாலைக் கீதம், கழகங்களின் கொடி யேற்றங்களுடன் ஆரம்பமானது. ஐந்து வாரங்களாக நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியின் இறுதிவாரத்தில் திலீபன் கல்வி நிலைய மாணவர்களுக்கிடை யேயான மில்லர், அன்னைபூபதி இல்ல விளையாட்டுப்போட்டியும் முதல்தடவையாக மாண வர்களின் தேகப் பயிற்சியும் உற்சாகமும் மக்களின் கவ னத்தை ஈய்ந்து கரகோசம் செய்ய வைத்தது. உதை பந்தாட்டப்போட்டியில், ஈழத் தமிழர் விளையாட்டு சம்மேள னத்தில் அங்கம் வகிக்கும் 12 கழகங்களில் 10 கழகங்கள் பங்கு கொண்டன. பிற மாவட்டமான எத்தனியாவில் இருந்து செந்தமிழ் விளை யாட்டுக்கழகம் முதற்தடவையாக இம்மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பித்தது.

உதைபந்தாட்டத்தில்:- 3ஆம் இடத்தை அன்புப்பறவை விளையாட்டுக் கழகமும், 2ஆம் இடத்தை புளூடைமன் விளை யாட்டுக் கழகமும், 1ஆம் இடத்தை மனற்காடு சென் அன்ரனீஸ் விளை யாட்டுக்கழகமும் பெற்றன.

கரப்பந்தாட்டத்தில்:- 3ஆம் இடத்தை அன்புப்பறவை விளையாட்டுக்கழகமும், 2ம் இடத்தை புளூடைமன் விளையாட்டுக் கழகமும், 1ஆம் இடத்தை நாகர்கோவில் வீமன் பொன்ட் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

இல்ல விளையாட்டுப் போட்டி யில்:- அன்னை பூபதி இல்லம் 1ஆம் இடத்தையும். பார்வை யாளர்களுக்கான ஓட்டம், பெண்களுக்கான சங்கீதக்கதிரை போன்ற போட்டிகளும் நடைபெற்றன. இறுதியில் பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டு கழகக்கொடி இறக்கல், தமிழீழத் தேசியக்கொடி இறக்கல் வைப வத்துடன், மாவீரர் வெற்றிக் கிண்ண, சுற்றுக்கிண்ண விளையாட்டுப்போட்டி-97 சிறப்பாக நிறைவேறியது. ✷



## மாவீரர் மேஜர் சுரேந்தி அரங்கில் "இது நெருப்பின் குரல்"

**செஞ்சோலை** - காந்தரூபன் அறிவுச்சோலையின் யேர்மனிக் கிளையினர், ஆண்டுதோறும் நடாத்திவரும் சோலைக் கலை மாலை என்ற கலை நிகழ்ச்சியை 'இது நெருப்பின் குரல்' என்ற இசை நிகழ்ச்சியாக கடந்த மே மாதம் நடாத்தியு ள்ளனர். யேர்மனியின் மூன்று நகரங்களில் நடாத்தப்பட்ட இவ்விசை நிகழ்ச்சிக்கு 5000க்கும் அதிகமான மக்கள் சமூகமளித்திருந்தனர்.

யேர்மனியில், விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பகால செயற்பாட்டாளராகவும் கலை - பண்பாட்டுக்கழகப் பொறுப் பாளராகவும் பின்னர் யேர்மனிக்




கிளையின் பொறுப்பாளராகவும் செயற்பட்டபோது, விபத்தில் சாவடைந்த மாவீரர் மேஜர் சுரேந்திரகுமார் அவர்களின் நினைவாகவே இந்நிகழ்ச்சி நடைபெற்ற மண்டபத்திற்கு 'மேஜர் சுரேந்தி அரங்கம்' என பெயரிடப்பட்டிருந்தது. மேஜர் சுரேந்தி அவர்களால் 'நித்திலா' என்ற பெயரில் எழுதப்பட்ட பாடல்களுக்கு இசை அமைக் கப்பட்டு அவை 'மண்ணை மறவாதே' என்ற பெயரில் யேர்மனிக் கிளையின் கலை- பண்பாட்டுக்கழக கலை ஞர்களால் தொகுத்து வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களில் 'நினைவழியா நாட்கள்' என்ற கவிதை நூல் வெளியீடும் நடைபெற்றது. அதன் முதற் பிரதியை அமைப்பின் லூணபேர்க் பிரதிநிதி நிமலன் பெற்றுக் கொண்டார்.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களிடமிருந்து விருது பெற்ற விடுதலைப் பாடகரான தேனிசை செல்லப்பா அவர்களால் பாடப்பட்ட பாடல்கள் 'இது நெருப்பின் குரல்' என்ற இசை நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெளியிடப்பட்ட 'இது நெருப் பின் குரல்' என்ற ஒலித்தட்டை அதன் பாடகரான தேனிசை செல்லப்பா அவர்களே வெளி யிட்டு வைக்க, முதற் பிரதியை அமைப்பின் தென் மாநிலப் பொறுப்பாளர் சிற்றரவி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தமிழீழத் தேச நிர்மாணத்திற்காக மக்கள் பணமாகவும் நகை களாகவும் வாரி வழங்கியமை இந்நிகழ்ச்சியின் உணர்வு பூர்வமான அம்சமாக அமைந் தது. அமைதி வணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சி "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற மக்களின் உணர்ச்சிக் கோசத்துடன் நிறைவு பெற்றது. ✷

## யேர்மனியில்
# மாணவர் எழுச்சி நாள் ஊர்வலமும் கண்காட்சியும்

**யே**ர்மனியில், தமிழீழ மாணவர் அமைப்பினர், தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு 7-6-97இல் 'டுசல்டேப்' நகரில் எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடாத்தி உள்ளனர். இதில் உலகத்தமிழர் இயக்க தமிழால யங்களைச் சேர்ந்த மாண வர்களும் பெற்றோர்களும் நிர்வாகிகளும் பொதுமக்களும் என பலர் கலந்துகொண்டு, சிங்கள அரசின் இன அழிப்புப் படுகொலைகளை வெளிப்ப டுத்தும் வகையிலும் தமிழீழத் தேசத்தின் தேவைகளை வெளிப்படுத்தியும் கோசங்களை வெளியிட்டதுடன், பாராளுமன்ற அலுவலகத்தில் மகஜர் ஒன் றையும் கையளித்தனர். கேர்ண் நகரின் றிவபார்க் மைதா னத்திலும் மண்டபத்திலும் ஒழுங்கு செய்யப்பட்ட எழுச்சிக் கண்காட்சியை, தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொறுப்பாளர் செல்வி மான் அவர்கள் (இங்கிலாந்து) தொடக்கிவைத்தார். தமிழீழத்தின் நீர், மண், கடல், பனை ஆகிய வளங்களை எவ்வாறு சிறப்பாக பயன்படுத்தலாம் எனவும் மேலைத்தேய தொழில்நுட்பத்தை எமது மண்ணில் எவ்வாறு பிரயோகிக்கலாம் எனவும் கண் காட்சியில் மாதிரி வடிவங் களுடன் விளக்கப்பட்டிருந்தது. தமிழீழ வளத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்கள் வெளிநாட்டவரை மிகவும் கவர்ந்தன. தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு மாணவர் அமைப்பினால் சிறப் பிதழ் ஒன்றும் வெளியிடப் பட்டது.

### உலகத்தமிழர் இயக்க கல்விப் பணியின் ஏழாவது ஆண்டு விழா

**மா**ணவர் எழுச்சிக் கண்காட்சி நடந்த அதே வளாகத்துள் 7-6-97இல், உலகத்தமிழர் இயக்க கல்விப் பணியின் ஏழாவது ஆண்டுவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொறுப்பாளர் செல்வி மான் அவர்களும், தமிழீழ மக்களுக் காகக் குரல் கொடுத்துவரும் டென்மார்க்கைச் சேர்ந்த செல்வி டொறீஸ் அவர்களும் மங்கள விளக்கேற்றி வைக்க விழா ஆரம்பமானது.

97 தமிழாலங்களிலிருந்தும் வருகை தந்திருந்த மாண வர்களும் ஆசிரியர்களும் நிர்வாகிகளும் பெற்றோரும் கலந்துகொண்ட இவ்விழாவில் பொதுத்தேர்வு, தமிழ்த்திறன் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற மாணவர்களது பேச்சுக்களும் இடம்பெற்றன. ஓவியப் போட்டியின் இறுதித் தேர்வும் நடாத்தப்பட்டு பரிசுகள் வழங் கப்பட்டன. தமிழாலயங்களில் ஐந்து வருடங்களுக்கு மேலா கக் கடமையாற்றிய ஆசிரியர்கள், உலகத்தமிழர் இயக்க கல்விப் பணிப் பொறுப்பாளர் திரு. நாகலிங்கம் அவர்களால் பாராட்டுப் பட்டயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தமிழாலய மாணவர்களால் வழங்கப்பட்ட நடனங்களும் நாடகமும் ("தொடருமா? முடியும்") தமிழர் பண்பாட்டையும் கிராமிய கலை அம்சங்களையும் மண்மீட்பின் அவசியத்தையும் வெளிப்படுத்தி நின்றன.

சிறப்புரை வழங்கிய செல்வி மான் அவர்கள், தமிழைப் போதிப்பதில் உலகத்தமிழர் இயக்க கல்விப்பணி ஆற்றும் சேவையைப் பாராட்டியதோடு, சிங்கள அரசு நடாத்திவரும் இனப்படுகொலைகளை மாணவர் களாலேயே உலகின்முன் இலகுவாக வெளிப்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார். செல்வி டொறீஸ் அவர்கள், தமிழீழத்தில் சிங்கள அரசு செய்யும் கொடுமைகளைக் கண்டித்ததுடன், உலக ஆதரவைக் கோரியும் உரையாற்றினார். ✷


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரும்புலிகள்.......!

# எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்



கரும்புலி மில்லர் .... நீ....!
காலனும் கலங்கிய காவியம்
காலத்தால் அழியாத ஓவியம்



அங்கையற்கண்ணி .....

அனல்விழி திறந்தாள்
அலைகடல் ஏறிடும்
கடற்புலி ஆனாள்
கரும்புலி ஆகியே
கப்பலைத் தகர்த்தாள்

**யூலை 05......**

1987 ஆம் ஆண்டு இந்நாளில்தான், 'கரும்புலி' கப்டன் 'மில்லர்' முதலாவது கரும்புலித் தாக்குதலை சிறிலங்கா இராணுவம் முகாமிட்டிருந்த நெல்லியடி மகாவித்தியாலத்தின் மீது நடத்தினான். கப்டன் மில்லருடன் ஆரம்பமான "கரும்புலிகள் சகாப்தம்" இன்று (97 யூலை 05 உடன்) ஒரு தசாப்த கால (10 ஆண்டு கால) வீர வரலாற்றை தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆழமாகப் பதிவு செய்கின்றது. இத் தசாப்த காலத்தில் தரையிலும் கடலிலுமென கரும்புலிகள், உலகை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியதும் சிறிலங்கா ஆயுதப்படையினரை கதிகலங்க வைத்ததுமான பல கரும்புலித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போரட்ட வரலாற்றில் ஓர் வலுவான போர் வடிவமாக மாறியுள்ள கரும்புலிகள், ஓர் சிறுபான்மை இனமாக இனஅழிவை எதிர்கொண்டுள்ள தமிழ் மக்கள் கூட்டத்தின் காப்பரணாக இன்று உருவாகி உள்ளார்கள்.

உலக விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது தனித்துவமானது. அதன் வழிமுறைகளும் தனித்துவமானவை. இத் தனித்துவமே விடுதலைப் புலிகளின் வீரசாதனைகளுக்கும் உலகம் வியக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் இராணுவ வெற்றிகளுக்கும் அடிப்படையாக உள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்து அனைவருமே கரும்புலிகள் போன்றவர்கள்தான். அவர்கள் எவ்வேளையிலும் தமது மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் தம் இன்னுயிரை ஈகம் செய்யத் தயாராகவே உள்ளனர். இவ்வாறு பல ஆயிரம் வீரர்கள் தம் இன்னுயிரை ஈகம் செய்தும் உள்ளனர்.

இந்தவகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஈகத்திற்கு முன்னுதாரணமானவர்கள்தான் என்றாலும், கரும்புலிகளின் ஈகமானது இவர்களில் இருந்தும் வேறுபட்டதாகும். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இலக்கில் தன்னுயிர் இழக்கப்படும் என்ற நிலையிலும் தமது இலட்சியம், குறிக்கோள் என்பவற்றில் எதுவித தளம்பலும் இன்றி உறுதியுடன் செயற்படுபவனே கரும்புலியாவான்.

ஆனால், இதனைச் சாதாரண மனிதர்கள் எல்லோராலும் செய்துவிட முடியாது. இது அவரின் சிந்தனைக்கே அப்பாற்பட்டது. இதனைச் செய்வதற்கு மரணத்தை மிஞ்சிய ஆத்மீக பலமும் மனோதிடமும் தேவையாகும். இது மரணத்தை மறந்து, தனது குறிக்கோளை அடைய முனையும் ஓர் இலட்சியவாதியின் உன்னத போராட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், கரும்புலிகளின் சாதனை மகத்தானதாகும். அவர்கள் புரிந்த ஒவ்வொரு தாக்குதலிலும் சிறிலங்காவின் இராணுவ இயந்திரம் ஆட்டம் கண்டது. அரசியல் வரலாறு பாதிப்புக்குள்ளானது.




அத்தோடு, இது சிறிலங்கா அரசின் உள்நாட்டு அரசியலை மட்டும் பாதிப்பதாக அமைவதில்லை. சிறிலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கையையே மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்ததாகவே இருந்தது.

இவ்வுன்னத தியாகத்திற்குத் தனியாக ஆண்கள்தான் உரியவர்கள் என்பதல்ல. பெண் கரும்புலிகளும் கடற்பரப்பில் மேற்கொண்ட மகத்தான சாதனைகள் உலக இராணுவ வரலாற்றில் புறந்தள்ள முடியாத இடத்தைப் பிடித்துக் கொண்டவை. முதற் கரும்புலி கப்டன் மில்லர் சிறிலங்காப் படையினரை தமிழீழ மண்ணில் அதிர வைத்து காவியமானான். முதல் பெண் கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி சிறிலங்காக் கடற்படையினரை தமிழீழக் கடலில் அதிர வைத்து எம் கண்களில் நிறைந்தாள்.

கடலில் பெண் கரும்புலிகள் ஆற்றிய மகத்தான சாதனைகள், சிறிலங்காக் கடற்படையின் நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் பெரும் பங்காற்றியுள்ளன.

இப்போராட்ட வடிவமானது, உலகத்தைப் பொறுத்து தனித்துவமானது மட்டுமல்ல, அந்நியர்களினால் புரிந்துகொள்ள முடியாதவையுமாகும். கரும்புலிகளின் துணிவும், மனோபலமும், அர்ப்பணிப்பும் அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது. சில ஆய்வாளர்கள், கரும்புலிகளுக்கு இம் மனோபலம் எங்கிருந்து கிடைக்கின்றது எனக்கண்டறிய பெரும் ஆவலாய் உள்ளனர்.

ஆனால், கரும்புலிகளின் இம் மனோபலத்தை அந்நியர் எவராலும் புரிந்துகொள்ளவோ, விளங்கிக்கொள்ளவோ முடியாது. ஏனெனில், இது ஒரு இனத்தின் இலட்சியப் பயணத்தின் தூண்டுதலால் உருவானது. இது இம்மண்ணிற்கே உரியது. இது இம்மண்ணின் மைந்தர்களுக்கே உரிய தனித்துவமானது.

இத்தனித்துவமான பேராயுதமே இன்று சிங்களப் பேரினவாதத்திலும் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கும் முக்கிய ஆயுதமாகவும் உள்ளது. இந்நிலையில் தலைவர் பிரபாகரன், "கரும்புலிகள் எமது இயக்கத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்" எனக் குறிப்பிட்டமை முற்றிலும் பொருத்தமானதே.

இவ்வாறாக, கரும்புலிகள் மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் தமது சாவையே தம் மடியில் சுமந்துசெல்லும் உன்னத புருஷர்கள். இவர்கள் அர்ப்பணிப்புக்கள் ஒப்புவமை அற்றவை. மரணத்தை வென்ற இம்மாவீரர்கள் வணக்கத்திற்குரியவர்கள். தமிழினம் உள்ளவரை இவர்கள் நாமம் போற்றப்படும். ✷

## ஈடிணையில்லார் - இவர் சாகார் !

காவி உடுத்து, காடு திரிந்து,
காய்கனி உண்டார் - ஒரு சாரார்
மாளிகை கட்டி மாதொடு மக்கள்
சூழ இருந்தார் - ஒரு சாரார்
நீடுலகத்தில் வாழும் நினைப்பில்
நேரம் இழந்தார் - ஒரு சாரார்
நேசமும் பந்த பாசமும் உந்த
நீதி மறந்தார் - ஒரு சாரார்
போரென அஞ்சி நாடு துறந்து
போய் விடுகின்றார் - ஒரு சாரார்
போரிடை நின்று வாணிபம் செய்யும்
வாழ்வை மகிழ்ந்தார் - ஒரு சாரார்
மேடை அமர்ந்து மாலை அணிந்து
மேன்மை அடைந்தார் - ஒரு சாரார்
ஆணை செலுத்தி ஆரும் நடுங்க
ஆள நினைத்தார் - ஒரு சாரார்
தீயுமிழ் கின்ற ஊர்தி சுமந்து
தேகம் கரைந்தார் - சில வீரர்
தேசவிலங்கு தூள்பட, ஓங்கு
தீயினுள் பாய்ந்தார் - சில வீரர்
ஆழ்கடலூடு ஓர்வெடி யோடு
ஆவி இழந்தார் - சில வீரர்
ஆரும் நெருங்கவே முடியாத
பேரரண் யாவும் பொடியாக
மோதி இனத்தின் மானம் நிறுத்தி
வீரன், நம் மில்லர், வெடியானான்!
மூலபலத்து ராணுவம் ஓடி
வீழ, ஒரு 'போர்க்' பொடியானான்!
நோய் நொடி என்று பாயில் விழுந்து
போய் நலிவுண்டா இவர் போனார்?
நோவுகள் கண்டு ஓடி ஒளிந்து
நூறு திசைக்கா இவர் போனார்?
ஆழிமுழக்கம் சூழ ஒலிக்கும்
நாள் வரை வீரர்- இவர் சாகார்!
ஈழ நினைப்பு மூள எழுந்த
ஈடிணையில்லார்-இவர் சாகார்!

நிலத்திலும் வெல்வோம் !
கடலிலும் வெல்வோம் !
நாளை
வான் பரப்பிலும் வெல்வோம் !
- கரும்புலிகள்

www.tamilarangam.net

# கரும்புலிகள் எழுச்சி நாள் - யூலை 05

# உலகம் ஈடாகாத வல்லமைச் சக்திகள்

சூரியக் கதிர்கள் வெம்மை யிறைக்கின்றன. மிகக் கடூரமாய் மணற்காட்டுப் புழுதி தீப்பிடிக்கின்றது – தாகத்துக்காய் பிராணிகள் சுனை தேடியலைகின்றன – சோழகம் இலைகளைப் பிய்த்தெறிகிறது – வையம் தவித்துக் கிடக்கிறது.

யூலை என்றால் இப்படித்தான் எரிந்து கொண்டிருக்கும் மாதம். மறுகி, மறுகி எங்கள் வாழ்வைத் துடிக்க வைத்த மாதம். பல யூலைகளைக் கண்டவர்கள் நாங்கள்.

83–ல் ஒரு யூலை......

கொழும்பில் சூரியன் கண்குத்தி நின்றான். வெம்மைத்தீ பரவி எரிந்தது. நடுங்கி, நடுங்கி ஓடிக்கொண்டிருந்த களனி கங்கையில் நீர் ஆவியானது.

நீர்வற்றி போகிறபோது, யாருடைய கிருபையாலோ எங்கிருந்தோ பாய்ந்தது புதுஅருவி, சிவப்பாய் – குருதியாய்.

மீன்கள் சுவைத்துக் குடித்தன தமிழர் குருதி. பல்லெல்லாம் இரத்தம் வழிய வீதியில் 'றபானா' அடித்து தமிழர் சடலங்களின் மீதேறி கண்டிய நடனமாடினர் சிங்கள இனவெறியர்.

கொழுந்து விட்டெரியும் தமிழர் கடைகளிலிருந்து பிடுங்கிக் கொண்டனர் பலர்.

கோரந்தான். என்ன செய்வது? வினைப்பயன் என்றனர் நொந்தோர். இப்படித்தான், யூலை இருந்தது. குருதி மணக்க வாடை அதைச் சுமந்து சென்றது தெருக்களெல்லாம்.

87 யூலையில், வடமராட்சியில் தீகொழுந்து விட்டு எரிந்தது. டாங்கிகள் பூமியை உழுதன. குண்டுகள் மூலம் வயல்களில் தமிழர்கள் உடல்கள் நடவு செய்யப்பட்டன. உயிர் துடிதுடித்துக் கலங்க வையம் ஓலமிட்டது–குருதி நிறைய ஆனந்தக் குளிப்புச் செய்தன பேய்கள். சனமெல்லாம் நடுங்கி ஒடுங்கியிருந்தனர்.

"எதுவும் செய்ய முடியாது எங்களால்........ கடவுளே, எல்லாம் வினைப்பயன்" என்றவர், அத்துவான வெளியை அண்ணாந்து பார்த்தபடி இருந்தனர்

இரவு, கறுப்புக்குள் ஒளிந்து கொண்டிருந்தது. புலன் இருண்ட மனிதரெல்லாம் ஓலமிட்டுக் கொண்டிருந்தனர்.

காலம் எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை. வரலாறும் அப்படித்தான். வானில் ஓர் ஒளிப்பொட்டு. நட்சத்திரமாய் இருக்கலாம். நடுங்கிக் கொண்டிருந்த மனிதரின் கண்களுக்கு அது ஒளிவட்டமாய்த் தெரிந்தது.

இருள் விழுங்கிய சூழல் ஆர்வத்துடன் எழுந்து பார்த்தது. சூரியக் குஞ்சு போல அந்த ஒளிப்பொட்டு மெல்ல இறங்கி வந்தது. சலனப்பட்ட

பூமியின் மங்கிய கண்கள் பிரகாசித்தன சடுதியாய்....... மிக ஆக்ரோஷத்துடன்....... மிகுந்த வேகத்துடன்......

ஒரே பாய்ச்சல்......!

வையம் நடுங்கித் தீர்ந்தது பேரோசை. எழுந்து அண்டமெல்லாம் எதிரொலித்தது.

'என்னஅது'......?......!

படைநடத்தி வந்த பேய்ச் சேனை திக்கின்றி அலைந்தது. விளங்கிக் கொள்ள முடியாது திகைத்தது

'ஊ...... ஊ' என உயிரின் குரல் ஒலிக்க, எங்கள் சைனியத்தில் இருந்து புறப்பட்ட 'உயிரம்பு' சுற்றிச் சுழன்றது.

"யார்.... யார்...."

"கப்டன் மில்லர்"

"எங்கிருந்து வந்தது"?

'கரும்புலிகள் அணியிலிருந்து'

'கரும்புலிகளா? அது என்ன?'

"அது ஒரு சக்தி: ஒரு போராட்ட வழிமுறை"

'அது என்ன?

"வினைப்பயன் என்று நொந்தவர்கள் தங்களது தவப் பயன் என்று நினைக்கிற வல்லமைச் சக்தி இந்த உலகம் முழுமையும் ஈடாகாது அந்தச் சக்தியின் ஆற்றலுக்கு"

உலகம் மூலைக்கு மூலை சுற்றியலைந்து வினாவெழுப்பி, விடையும் கண்டது.

கிழக்கில் சூரியன் எட்டிப் பார்த்தான் அத்துவான வெளியை அண்ணாந்து பார்த்தவர்கள் எழுந்து, 'நம்பிக்கையை' பற்றிப் பிடித்தவாறு நடக்கத் தலைப்பட்டனர்.

அந்த யூலை ஐந்திலிருந்து எங்களுக்கு வசந்தம் பிறந்தது. மழை பொழிந்தது. குளிர்ந்த தென்றல் வீசியது. இலையுதிர்த்த மரங்கள் எல்லாம் புதிய ஆடை கட்டிக்கொண்டு பூத்தும் காய்த்தும் குலுங்கின.

அப்போது முதல்.......

அடக்குமுறையாளர்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அடிவயிற்றில் தீ பரவியது. எங்கும் எப்போதும் மரணக் கற்பனையில் அலைந்தார்கள். அவர்களின் இரவுகள் அச்சம் தருவனவாயிருந்தன.

ஒரு கரும்புலியின் பிறப்பு நிகழும், புதியதொரு வரலாற்றுச் சாதனையுடன்!

எங்கள் மண்மீதும் மக்கள் மீதும் எமது நேரிய போராட்டத்தின் மீதும் கைவைக்க எண்ணுவாரோ!


அப்போதிருந்து எங்கள் சைனியத்திலிருந்து புறப்படும் உயிரஸ்திரங்கள் நள்ளிரவில் பதைத்தெழுந்து குரல் கொடுத்தார்கள்.

யூலை மாதம் கரும்புலிகளுக்கானது. உலகின் முகடுகளில் எதிரொலிக்குமாறு அவர்களின் ஆத்மகானம் கேட்கிறது. எங்கள் மண்ணின் காற்று அதை காவிச் செல்கிறது. மரங்களும் பறவைகளும் அதை உள்வாங்கிப் பாடுகின்றன. மனிதர்களின் நினைவெல்லாம் அவர்கள் குரல்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அசுரர்களை அழிக்க வந்த கடவுளின் குமாரர்களாய் மனக் கண்களில் ஒளிரும் அவர்களின் நினைவில் நனைந்து கொண்டு விடுதலையின் படிகளில் ஏறி நடப்போம்.

"கரும்புலிகள் எம்மைக் கொல்ல வந்துள்ளார்கள்"– பயங்கரக் கனவுகளைக் காட்டிலும் அவர்களுக்கு நித்திரை தேவயில்லை என்றாயிற்று.

இந்நிலை, காலம் எங்களுக்களித்த வரம். தமிழரைக் காணும் போதெல்லாம் கரும்புலிகளின் பயம் வாட்டுகிறது. எதிரிகளை ஒரு கணநேரம், காற்றுறையும்: கடலுறையும்: பிரபஞ்சம் திடுக்கிட்டுப்போய்–பின் நகரும். அங்கே சன்னதம் கொள்ளும். துவம்சம் செய்தே ஓயும்! நினைப்பில் குறியுங்கள்.

யூலை மாதம் கரும்புலிகளுக்கானது. உலகின் முகடுகளில் எதிரொலிக்குமாறு அவர்களின் ஆத்மகானம் கேட்கிறது. எங்கள் மண்ணின் காற்று அதை காவிச் செல்கிறது. மரங்களும் பறவைகளும் அதை உள்வாங்கிப் பாடுகின்றன. மனிதர்களின் நினைவெல்லாம் அவர்கள் குரல்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அசுரர்களை அழிக்க வந்த கடவுளின் குமாரர்களாய் மனக் கண்களில் ஒளிரும் அவர்களின் நினைவில் நனைந்து கொண்டு விடுதலையின் படிகளில் ஏறி நடப்போம். ✳



புலிப்படை வீரர்கள் புயலாகிச் சென்றார் – தாங்கள்
களத்தினை வெல்வது திடமான தென்றார்
கரும்புலிக் குழந்தைகள் கனலாகிப் போக – எங்கள்
காவியத் தலைவனின் கண்களில் சோகம்.

www.tamilarangam.net

# தியாகத்தின் இமயத்தைத் தொட்ட இலட்சிய வீரர்கள் கரும்புலிகள்

**கரும்புலிகள் – பத்தாம் ஆண்டு நினைவெழுச்சி நாளையொட்டி (05–07–97), 93ஆம் ஆண்டு கரும்புலிகள் நாளின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் பிரிவில் கரும்புலி வீரர்கள் மத்தியில், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையை இங்கு தருகிறோம்.**

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில், முழு இலங்கைத் தீவையும் அதிரவைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர், ஓர் ஒப்பற்ற சாதனையை நிலை நாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலி வீரன், தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனி மனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று, எதிரியின் பாசறைக்குள் வெடிக்க வைத்தான்.

இந்த பூகம்பமான தாக்குதல் நிகழ்வு, அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றியமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக்கொண்டது. தனிமனிதனாக, எமது போராளி ஒருவன், தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன் முதலாக, எமது போராட்ட வரலாறு, தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புதத்தைப் பதிவு செய்து கொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டது. என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர் வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப் பார்க்கவும் முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும், எழுச்சியும் மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச்சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக் குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கின்றோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கின்றோம். பலம்வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டுகொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து, ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டும். இந்தத் தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. அல்லாத பட்சத்தில், நாம் இனவாரியாக அழிந்து போவதைத் தவிர்க்கவே முடியாது. பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்புபோன்ற உறுதியும் பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக்காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னையே காதலிக்கின்றான். தனது உயிரையே நேசிக்கின்றான். உயிர் வாழ வேண்டும் என்று துடிக்கின்றான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர் வாழ விரும்புவதால், உயிர் அற்றுப்போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்குப் பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால், ஒரு கரும்புலி வீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தன் உயிரைவிட தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராய் இருக்கின்றான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது.



நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்துகொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்துகொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும்போதுதான் வீரம் தோன்றுகிறது, துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கெல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்று விடுகின்றான். அவன்தான் தனது மனச் சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து விடுகின்றது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

'கரும்புலிகள்' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகின்றோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத பூடகமான, இரகசியமான தன்மையையும், செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே, 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப் பெற்றிருக்கின்றது.

இந்த இரகசியத் தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்த தனிமனித தத்துவத்திற்கு அப்பால் செயற்பாடே இங்கு முதன்மை பெறுகின்றது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அனாமதேயமாக உறங்கியபோதும், அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து இலட்சிய உயிர் மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திர நாயகர்களை நான் சிரந்தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று மனித விடிவைநோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்து, அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும்போது, இனம் புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும்பொழுது எல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகங்களைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

அன்றொருகாலம் அமைதிவழியில் உரிமை கேட்டு, ஆர்ப்பரித்த தமிழினத்தை அடக்குமுறையாளனின் இரும்புக்கரங்கள் நசுக்கிவிட்டன. இன்று நீதி கேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்தச் சக்திகளாலும் நசுக்கிவிட முடியாது.

### இது கரும்புலிகளின் சகாப்தம்.

இடியும் மின்னலுமாக புலிகள் போர்க்கோலம்கொண்டுவிட்ட காலம்.

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள், புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாவும், எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக. ✳

www.tamilarangam.net



# "முகத்தை மறைத்து புகழை வெறுத்தவர்கள்"

எப்படி இவர்களுக்கு முகங்களில்லையோ, முகவரிகளில்லையோ அதேபோலத்தான், எத்தகைய அறிவாலும் எத்தகைய ஞானத்தாலும் கணிப்பீடு செய்யக்கூடிய வகையில் இவர்களது உள்ளகமும் இல்லை.

இங்கே எழுதப்பட்டுள்ளவை எல்லாம் இவர்களோடிணைந்த சில சம்பவங்கள் மட்டுமே. அந்தச் சம்பவங்களினூடு, உங்களால் முடிந்தால் அவர்களது மனவுணர்வுகளை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்; அவர்களது சிந்தனைப் போக்கின் தன்மைகளை உய்த்தறிந்து கொள்ளுங்கள்.

தனிமனித அபிலாசைகளுக்கு அப்பால் – சுயத்தின் சிறைகளை உடைத்துக்கொண்டு, அவர்களது சிந்தனையோட்டம் விரிந்த பொழுது – ஈடிணையற்ற தேசபக்தியுடன், தமதுடலோடு தமதுயிரோடு 'தம்மையே' தியாகம் செய்யத் துணிந்தவர்கள் அவர்கள்.

ஓயாத எரிமலையாக சதா குமுறிக் கொண்டிருந்த நெஞ்சுக்குள், ஆற்ற முடியாத தாகமாக எழுந்துகொண்டிருந்த சுதந்திர வேட்கையைத் தணிக்க, எதுவும் செய்யவும் எங்கேயும் செய்யவும் தயாரான நெஞ்சுரத்தோடு அவர்கள் பயணம் போனார்கள்.

ஒரு மாறுபாடான – முற்றிலும் எதிர்மாறான தள நிலைமைக்குள் நின்று அவர்கள் எவ்விதமாக இவற்றைச் சாதித்திருப்பார்கள் என்பதை, ஆற அமர இருந்து, உள்ளத்தைத் திறந்து சிந்தித்துப் பாருங்கள்.

நெஞ்சு புல்லரிக்கும்; உயிர் வேர்க்கும்.

அவர்கள் – கண்களுக்கு முன்னால் விரிந்து கிடந்த இன்றைய 'நவீன நாகரிகத்தின்' தாலாட்டில்தான் உறங்கினார்கள்; புலிகளின் ஒழுக்க வாழ்வின் உயரிய மரபை மீறிவிடச் செய்யும் சூழ்நிலைக்குள்தான் உலா வந்தார்கள். இவற்றுக்குள் வாழ்ந்தும் – எதற்கும் அசையாத இரும்பு மனிதர்களாக நெருப்பைக் காவித்திரிய எப்படி அவர்களால் முடிந்தது?

வெளிப்படையாக – அந்த உல்லாச வாழ்வோடு கலந்து சீவித்தபோதும், உள்ளுக்குள் – இதய அறைகளின் சுவர்களுக்குள் – தாயக விடுதலையின் வேட்கையை மட்டுமே சுமந்துகொண்டு, பகைவனின் அத்திவாரங்களைக் குறி வைத்துத் தேடி அலையும் அபூர்வமான நெஞ்சுரம் எங்கிருந்து இவர்களுக்குள் புகுந்தது?

பகைவனின் இலக்கை அழிக்கும் தன் நோக்கினை அடைவதற்காக, தன்னை யழிக்கவும் துணிந்த இந்த அதிசய மனவுணர்வை எப்படி அவர்கள் பெற்றார்கள்?

தாயகத்துக்காகச் செய்யப்படும் உயிர் அர்ப்பணிப்புகளில் ஏற்றத் தாழ்வுகள் கிடையாது என்பதுதான் உண்மை. ஆனாலும், இங்கென்றால் – வெடி அதிரும் கடைசி நொடிப்பொழுது வரை – பரிபூரணமான ஒரு 'போர்ச் சூழ்நிலை' அந்த வீரனது மனநிலையை அதே உறுதிப்பாட்டோடு பேணிக்கொண்டே இருக்கும். ஆனால், அங்கு......?

அது முற்றிலுமே தலைகீழான ஒரு தள நிலைமை. மானிட இயல்புணர்வுகளைத் தூண்டி – அவற்றுக்குத் தீனி போட்டு – சுயகட்டுப்பாட்டை இழக்கச் செய்து – மன உறுதிப்பாட்டைச் சிதைத்துவிடக்கூடிய உல்லாசத்தின் மடி அது. அதில் படுத்துறங்கி – பகை தேடி, வேவு பார்த்து, ஒழுங்கமைத்து, குறி வைத்து வெடி பொருத்திப் புறப்பட்டு, மனிதக் குண்டாகி – எல்லாவற்றையும் தானே செய்வதோடு –

> அது முற்றிலுமே தலைகீழான ஒரு தள நிலைமை. மானிட இயல்புணர்வுகளைத் தூண்டி – அவற்றுக்குத் தீனி போட்டு – சுயகட்டுப்பாட்டை இழக்கச் செய்து – மன உறுதிப்பாட்டைச் சிதைத்துவிடக்கூடிய உல்லாசத்தின் மடி அது. அதில் படுத்துறங்கி – பகை தேடி, வேவு பார்த்து, ஒழுங்கமைத்து, குறி வைத்து வெடி பொருத்திப் புறப்பட்டு, மனிதக் குண்டாகி – எல்லாவற்றையும் தானே செய்வதோடு – பகையழிக்கும்போது தனையழிக்கும் போதும்கூட – தன் பெயர் மறைத்துப் புகழ் வெறுக்கின்ற தற்கொடை, ஒரு அதியுயர் பரிமாணத்தை உடையது. உயிர் அர்ப்பணத்தில் அது உன்னதமானது. ஈடு இணை அற்றது. இந்த வியப்புமிகு தியாக உணர்வை இவர்களுக்கு ஊட்டியது எது?

பகையழிக்கும்போது தனையழிக்கும் போதும்கூட – தன் பெயர் மறைத்துப் புகழ் வெறுக்கின்ற தற்கொடை, ஒரு அதியுயர் பரிமாணத்தை உடையது. உயிர் அர்ப்பணத்தில் அது உன்னதமானது. ஈடு இணை அற்றது. இந்த வியப்புமிகு தியாக உணர்வை இவர்களுக்கு ஊட்டியது எது?



இவையெல்லாம் – அந்த 'நிழல்' வீரர்களினது பன்முகப்பட்ட தோற்றப்பாட்டின் ஓரிரு பக்கங்கள் மட்டுமே. சொல்லப்படாத பக்கங்கள் நிறைய உண்டு. அவை எழுத முடியாத காவியங்கள்; அவர்கள் முழுமையாக எழுதப்படும்போது – படிக்கின்றவர்கள் விறைத்துப் போவார்கள். ஆன்மா உறைந்து சிலையாவார்கள்.

எப்படி அவர்கள் எதிரியின் உச்சந்தலையில் கூடாரமடித்தார்கள்......? கூடாரமடித்து – அவனது மண்டை ஓட்டைத் துளையிட்டு, அவர்கள் உள்ளே நுழைந்தது எப்படி.......? நுழைந்து – அவனது மூளையின் பிரிவுகளையல்லவா அவர்கள் குறி வைத்தார்கள். அது எப்படி......? எவ்விதமாக இவையெல்லாம் சாத்தியமானது.......? எத்தகைய மதிநுட்பத்தோடு நகர்வுகளை மேற்கொண்டு, இந்த அதிஉயர் இராணுவ சாதனைகளை அவர்கள் படைத்திருப்பார்கள்.......? இந்த விவேகத்தையும் புத்திக் கூர்மையையும் இவர்களுக்கு ஊட்டி, அவர்களை நெறிப்படுத்தி வளர்த்தது எது?

உண்மையிலேயே இவையெல்லாம் மேனி சிலிர்க்கச் செய்யும் விந்தைகளேதான். நம்புதற்கரிய அற்புதங்கள்தான்!

> மன ஒருமைப்பாட்டோடு தங்களைத் தாங்களே வழிப்படுத்தி, எங்கள் இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்த அந்தப் புனிதர்கள், தான் அழியப்போகும் கடைசிப் பொழுதுகளிலும் நிதானத்துடனும் விவேகத்துடனும் செயலாற்றி, பகைவனின் இலக்குகளை அழிப்பதில் மட்டுமே குறியாக இருந்த அந்தக் கரும்புலிகள், "முகத்தை மறைத்து, புகழை வெறுத்து, மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட" பிரபாகரனின் குழந்தைகள்..........

மன ஒருமைப்பாட்டோடு தங்களைத் தாங்களே வழிப்படுத்தி, எங்கள் இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்த அந்தப் புனிதர்கள், தான் அழியப்போகும் கடைசிப் பொழுதுகளிலும் நிதானத்துடனும் விவேகத்துடனும் செயலாற்றி, பகைவனின் இலக்குகளை அழிப்பதில் மட்டுமே குறியாக இருந்த அந்தக் கரும்புலிகள், "முகத்தை மறைத்து, புகழை வெறுத்து, மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட" பிரபாகரனின் குழந்தைகள்.......... ✳

# புகை முடித்த பகை!

கடற்கோட்டைக்குள் ஒரு குகை. அங்கே........ உஷ்ணமான மூச்சுக்களின் வெப்பத்தால் உலர்ந்து போகிறது உவர்நீர்.

கடலன்னை தன் அலைக்கரங்களால் அந்த உஷ்ண மூச்சுக்களின் உறைவிடங்களைத் தழுவிச் சாந்தப்படுத்த முனைகிறாள்.

சிறுத்தைகளின் கடலரசன் அங்கே பதுங்கியவண்ணம் இருக்கிறான். அவனது அங்கங்கள் அனைத்திலுமே பாயப்போவதற்கான அறிகுறிகள் தென்படுகிறது.

சிறுத்தை ஒன்று சினத்தை வெளிப்படுத்தியது.

"மச்சத்தைத் தேடி வலைவீசச் சென்றவர்களை மிச்சமேதும் இல்லாமற் செய்தவர்களைச் சும்மா விடுவதா? அரசே! உடனே உத்தரவிடுங்கள். அவர்களையும் மிச்சமில்லாமற் செய்துவிடுகிறேன்." ஆர்ப்பரித்த சிறுத்தையை அமைதிப்படுத்தினான் அரசன்.

"தருணம் வரட்டும்."

அதற்குள் மற்றுமொரு சிறுத்தை சீற்றத்தைச் சிந்தியது.

"அரசே! அந்நியன் எமது கடற்பரப்பில் ஆதிக்க வெறிகொண்டு எம்மவரைக் கொலை செய்வதா? இது எமது கடல் அல்லவா? எமது கடலில் எமது மக்கள் பயணம் செய்ய உரிமையில்லையா? ஆணையிடுங்கள் இப்போதே. ஆதிக்க வெறியரை அக்குவேறு, ஆணிவேறாக்குகிறேன்."

கடலரசனது கண்கள் கனலைச் சொரிந்தன.

"ஆகட்டும்."

ஆணையிட்டான். வார்த்தைகளுடன் வெளியாகிய தீப்பொறிகள், சிறுத்தைகளின் சீற்றத்தைச் சூடேற்றின. பொங்கி எழுந்தது சிறுத்தைகள் கூட்டம்.

"பகை முடித்துச் சாவினை அணைப்பதே எமது குறிக்கோள்."

ஆக்கிரோஷத்துடன் ஆரவாரித்தன.

குகையின் வாயில் மெல்லத் திறந்துகொண்டது. பொங்கியெழுந்த சிறுத்தையொன்று, புகையெனக் கிளம்பிக் கடல் மையத்துள் மறைந்துபோனது.

சீற்றமே உருவாகச் சிறுத்தை, சிங்கத்தின் வாரிசுகளைத் தேடித் தமிழீழக் கடற்பரப்பெங்கும் சல்லடைபோட்டது.

சிங்கத்தின் வாரிசுகள் களியாட்ட விழா நடத்தி முடித்தபின் கடலுக்குள் பவனி வரத்தொடங்கின.

சிறுத்தையின் விழிகள் தீப்பிழம்பாகின. இரையைத் தேடிவிட்ட திருப்தியுடன் இலக்கை நோக்கிச் சீறியது.

சல்லாபத்தில் ஈடுபட்டிருந்த சிங்க வாரிசுகள், சிறுத்தையின் சீறலைக் கேட்டுச் சில்லிட்டுப்போயின; சிதறி ஓட முயன்றன.

ஒரு கணம் பதுங்கிய சிறுத்தை புயலென எழும்பிப் பாய்ந்தது பகை நோக்கி.

புகையொன்று கிளம்பிப் பூகம்பம் வெடித்தது.

தீப்பிழம்பு மின்னலெனப் பளிச்சிட அதிர்ந்தது தமிழீழம்.

தொடர்ந்தது பேரிடி.

சிவந்தது தமிழீழக் கடற்பரப்பு.

சிறுத்தையின் இலட்சிய வெற்றியால் கனிந்தது கடலன்னையின் உள்ளம். குளிர்ந்தது தமிழீழத்தாயின் நெஞ்சம்.

தன்னை முத்தமிட்ட மைந்தனை, நெஞ்சாரத்தழுவி நெகிழ்ந்து போகிறாள் கடலன்னை.

தன்னிரு தளிர்க்கரங்களால் அவனை ஏந்தித் தமிழ்த்தாயிடம் ஒப்படைக்கிறாள்.

ஆம், அவளது வயிறெனும் குகைக்குள் மீண்டுமொரு கரு, பகைமுடிக்கவெனப் புலியாக உருவாகிறது! ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை

# காவல்

**- வளவன் - (தமிழீழம்) -**

பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள் மதியம் இரண்டு மணியிருக்கும். வெயில் கொழுத்திக் கொண்டிருந்தது. மழைக் காலமானபோதும் பருவமழை பெய்து ஓய்ந்திருந்தது. நீர் நிலைகளில் நீர் குறைந்து வரத்தொடங்கியது. நுளம்புகளின் அட்டகாசத்திற்குக் குறையிருக்கவில்லை.

வெக்கை தாங்க முடியாது மாமர நிழலின் கீழ் கதிரை ஒன்றைப் போட்டுவிட்டு அமர்ந்தேன். சேகுவேராவின் வாழ்க்கை வரலாற்று நூல் கைகளில். நூலில் கவனம் செல்லவில்லை. மெல்லிய காற்று சற்று குளிருடன் இடையிடை வீசி உடம்பைத் தழுவிச் சென்றது இதமாக இருந்தது. குருவிகளின் சத்தம் இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தது. மிகச் சிறிய சிப்பிள் குருவிகள் தென்னை மர ஓலைகளில் வந்தமர்ந்ததைப் பார்த்தேன். நீளமான தனித்தனி ஓலைக் கீற்றுகளில் அவை குந்தியிருக்க முயன்றதால் கீற்றுக்கள் வளைந்து ஆடின. குருவிகள் கீற்றுக்களில் தொங்கியவாறு ஆடும்போது ஊஞ்சல்களில் ஆடுவது போலிருந்தது. வேலியோரத்தில் இருந்த உயரமில்லாத பனைமர வட்டினுள் கருநிறக் குருவி கூடு கட்டிக்கொண்டிருந்தது. ஆண், பெண் இரண்டும் அடிக்கடி வந்து வாலைத் தூக்கி தரையிலிருந்து கத்தியபடி, கட்டும் கூட்டினுள் போய் வந்தவாறு இருந்தன. அப்படி போகும்போது சில வேளைகளில் வாயில் கவ்விய தும்பையோ, பஞ்சையோ, சிறு குச்சிகளையோ கூட்டினுள் வைத்து விட்டுச் சென்றன.

அணிலொன்று அப்பனையில் ஏறியபோது, அச்சிறு குருவிகள் அதனைக் கொத்தோ கொத்தென்று கொத்தித் துரத்திவிட்டன. சிர் என்று அவை இரண்டும் மரங்களுக்கு மரம் தாவிப் பறப்பது மிகுந்த அழகாய் இருந்தது. மேற்கு நாடுகளில் காணப்படும் றொபின் பறவைகளின் இனமாக இவை இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டேன். என்னைச் சுற்றிலும் ஏராளம் வண்ணத்திப் பூச்சிகள் பல்வேறு நிறங்களில் அங்கும் இங்கும் பறந்துகொண்டிருந்தன. ஒரு பெரும் கூட்டமாய் நீள் வரிசையில் வந்து கொண்டிருந்த வண்ணத்திப் பூச்சிகள் போகும் திசையைப் பார்க்கத் திரும்பியபோதே அக்காட்சி கண்ணில் பட்டது.

நாயொன்று சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்தது. நிலத்தை முகர்ந்து முகர்ந்து பார்த்தபடியும், நிலத்தில் எதனையோ நக்கிச் சாப்பிடுவதையும் கண்டேன். நிலத்தில் ஏதாவது உணவுப் பொருட்கள் இருந்ததாகவும் தெரியவில்லை. பசி தாங்காமல் மண்ணைத்தான் எடுத்து சாப்பிடுகிறதோ என்று எண்ணிக் கொண்டேன். அதன் வயிறு ஒட்டி, கால்கள் தள்ளாடின. பெரிதாக தொங்கிய முலைகள், அண்மையில் குட்டி போட்டிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தின. முலைகள் சுருங்கிப் போய் இருந்தன. நான் உற்றுப் பார்ப்பதை உணர்ந்து கொண்டதோ என்னவோ தலையைத் தூக்கி என்னைப் பார்த்தது. கண்கள் பஞ்சடைந்து மங்கிப் போய் இருந்ததையும் சொல்ல முடியாத சோகம் அங்கு நிழலாடுவதையும் கண்டேன். கண்கள் இரண்டிலும் கண்ணீர் பெருகி நிறைந்திருப்பதாக எனக்குத் தோன்றியது. சிறிது நேரம் சுற்றிச் சுற்றி வந்து மண்ணை நக்கிக் கொண்டிருந்த நாய் முனகிக் கொண்டு தகர வேலியின் கீழ் நுழைந்து வெளியே ஓடத் தொடங்கியது.

அதன் மீது ஆர்வம் ஏற்பட நான் அதன் பின்னே செல்லத் தீர்மானித்து எழுந்து நடக்கத் தொடங்கினேன். நாய் சில நூறு யார்களுக்கு அப்பால் இருந்த வீடொன்றில் வேலிப்படலையினூடு வளவுக்குள் சென்றது. ஆட்களையும் காணவில்லை, வந்த நாயையும் காணவில்லை என வளவை ஒருதரம் சுற்றி வந்தேன். வளவினுள் அழகிய கல் வீடொன்று காணப்பட்டது. சிவப்பு மை தீட்டப்பட்ட சுவர்களுடன் பல வசதிகளும் உடையதாக அந்த வீடு இருந்தது. வீட்டைச் சுற்றி பூந்தோட்டமொன்று, பல்வேறு பூ மரங்கள் செடிகளுடன் விளங்கியது. கிணற்றுக்கு அண்மையாக மரக்கறித் தோட்டம் ஒன்றும், பல ஏக்கர் பரந்திருந்த நெல் வயல்களும் காணப்பட்டன. நெல் வயல்களில் நெற் கதிர்கள் முற்றிச் சாய்ந்திருப்பதையும் அறுவடை செய்யப்படாமல் கருகிப் போய்க்கொண்டிருப்பதையும் கண்டேன். வீடு பொருட்கள் எதுவுமின்றி வெறுமையாய்க் கிடந்தது. வீட்டுக்காரர் சில நாட்களுக்கு முன்னர்தான் அவசர அவசரமாக வீட்டை விட்டு வெளியேறி எங்காவது சென்றிருக்க வேண்டும் என்பது தெரிந்தது. சொந்த வீட்டையே அப்படி அவசரமாக விட்டுச் செல்லும் போது தங்கள் நாயைக் கூட்டிக் கொண்டு போக மறந்திருக்க வேண்டும். அல்லது விட்டு விட்டுப் போயிருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டேன்.

வீட்டின் பின்புறச் சுவருக்கருகில் ஒரு பள்ளத்தில் அந்த நாய் படுத்திருந்தது. அந்த வீட்டுக் காவலாக அந்த நாய் தொடர்ந்து இருந்து வருவதாகப் பட்டது. என்னைக் கண்டதும் உறுமியது. ஒருவித பயத்துடன் கிட்ட நெருங்கிப் பார்த்தேன். தாயைச் சுற்றி ஐந்து குட்டிகள் மடியினுள் முகத்தைப் புதைத்தவாறு, கால்களை உதைத்தவாறு கிடந்தன. தாயின் வெள்ளை நிறத்தில் இரண்டும் கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறத்தில் மூன்றும் தவழ்ந்து கொண்டிருந்தன. எட்டு, ஒன்பது நாள் பிறந்தவையாக அவை இருக்க வேண்டும். கண்களை மூடிக் கொண்டு பால் குடித்தவை தாயின் உறுமலைக் கேட்டு ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்ததைக் கண்டேன். தளதள வென்று கரும்புள்ளி விட்ட சிறு பஞ்சுப் பொதிகளைப் போல் உறுண்டிருந்த அவற்றின் வாய்களில் மெல்லிய முறுவல் நெழிவது போலவும், கண்கள் ஒளி வீச மன மகிழ்வுடன் இருப்பது போலவும் உணர்ந்து கொண்டேன். அவ்வேளை மூன்று நாட்களுக்கு முன்னர் நான் கண்ட ஒரு பிள்ளையின் முகம் மனத்திரையில் வீச்சாக விழுந்தது.

> "மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையில்ல நாங்க மட்டும் வீடு திரும்ப வழியில்ல"

ஐந்து வயது அழகான பெண்பிள்ளை. அவளது வாயிலும் சிரிப்பு தழுவிக் கிடந்தது. ஆனால், அவள் அசைவற்றுக் கிடந்தாள். தாய் நெஞ்சிலும் வயிற்றிலும் கைகளால் அடித்தவாறு பெரிதாக ஓலமிட்டுக்கொண்டிருந்தாள். அவளை எவராலும் கட்டுப் படுத்த முடியவில்லை. அவளின் துயரை எவராலும் ஆற்றவும் கூடவில்லை. "என்ரை ராசாத்தி போயிற்றியா" என்ற அந்தத் தாயின் வயிற்றிலிருந்து ஏக்கத்துடன் வந்த குரல் என்னை ஒருதரம் உலுப்பிவிட்டது.

ஒரு மாதத்திற்கு முன்னர்தான் அப்பிள்ளையை அகதி முகாம் ஒன்றில் கண்டபோது சிட்டாய் பறந்துதிரிந்து கொண்டிருந்தாள். எங்களைக் கண்டவுடன் துள்ளி ஓடிவந்து என் நெஞ்சில் ஏறி அணைத்துக்கொண்டு "மாமா என்னையும் கூட்டிப் போங்கோ" என்று கெஞ்சுவதுபோல் கேட்டாள்.

> ஐந்து வயது அழகான பெண்பிள்ளை. அவளது வாயிலும் சிரிப்பு தழுவிக்கிடந்தது. ஆனால், அவள் அசைவற்றுக் கிடந்தாள். தாய் நெஞ்சிலும் வயிற்றிலும் கைகளால் அடித்தவாறு பெரிதாக ஓலமிட்டுக்கொண்டிருந்தாள்.

"அப்ப, அம்மா, அப்பாவை என்ன செய்யிறது?" என்று கேட்டேன்.

"அவங்களும் வரோணும்" என்று அவள் செல்லமாகக் கூறியபோது அனைவரும் வாய் விட்டுச் சிரித்தோம்.

"சரி, நீ, வளர்ந்தபின் கூட்டிப் போகிறேன். அதுக்கு முதல் ஒரு பாட்டுப் பாடிக் காட்டு" என்று கேட்டேன். உடனே கீழே இறங்கி பின்னுக்குக் கைகளைக் கட்டியவாறு நின்றுகொண்டு,

"மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையில்ல; நாங்க மட்டும் வீடு திரும்ப வழியில்ல"

என்று கிள்ளை மொழியில் அவள் பாடியபோது அனைவரும் கைதட்டி உற்சாகப்படுத்தினோம்.

தாயும் தகப்பனும் பிள்ளையின் சுட்டித்தனத்தைப் பெருமையுடன் பார்த்து மகிழ்வது தெரிந்தது. அந்நினைவு என் மூச்சைத் திணற வைத்தபோது பிள்ளையின் தகப்பன் அழுதழுது கூறிக்கொண்டிருந்தது என் கண்களில் நீரையே வரவழைத்துவிட்டது.

என்றார். அவரது குரலில் இயலாத்தனம் குமிழியிட்டது. "நாசமாய்ப் போவாங்க!" என்று யாரோ ஒரு கிழவி திட்டுவது காதில் விழுந்தது.

தூரத்தே இடிபோல் எழுந்த சத்தம் என்னை நடப்புலகத்திற்கு கொண்டு வந்தது. நாயும் காதுகளை உயர்த்திக் கொண்டு எழுந்து நின்றது. தொடர்ந்து



எறிகணைகள் எங்கோ விழுந்து வெடிக்கும் சத்தம் கேட்டது. மயிர்க் கால்கள் குத்திட நாயும் அத்திசையை நோக்கி குரைக்கத் தொடங்கியது. நாய்களுக்கு விசேட சக்திகள் இருப்பதாக ஊரார் பேசிக்கொள்வது ஞாபகத்திற்கு வந்தது. வரும் ஆபத்தை ஏற்கனவே தமது உள்ளுணர்வால் உணர்ந்து கொள்ளுமாம். நில அதிர்வைக்கூட படுத்திருந்து அறிந்துகொள்ளுமாம்.

ஒருயிரை எடுத்துச் செல்ல எருமையில் ஏறிவரும் யமன் கூட அவற்றின் கண்களில் படும் என்றும் நாய்கள் இடைவிடாது ஊழையிட்டுக்கொண்டிருந்தால் அது உயிர் ஒன்று போகப் போவதற்கான அறிகுறி என்றும் ஆச்சி சொல்லுவா. ஆச்சிக்கு உற்சாகம் ஊட்டினால் மேலும் நிறைய பேய்க்கதை கூறுவா. இரவு வேளை வீதியில் ஒரு பெண் போய்க்கொண்டிருந்ததாகவும் சுடலைக்கு அருகில் வந்ததும் அப்பெண் நாயாக ஓடி மறைந்ததாகவும், அது மோகினிப் பேய் என்றும் வெகு சிரத்தையோடு கூறி முடிப்பா. நான் அவற்றை மறுத்துப் பேசாமல் சுவராஸ்யமாகக் கேட்டுக்கொண்டு, மின்சார விளக்கு வராத காலத்துப் பல்வேறு கற்பிதங்களின் கூட்டால் வரும் விபரீதக் கற்பனைகள் என எண்ணிக்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

www.tamilarangam.net



# காவல் (சிறுகதை).....

"பிள்ளைக்கு மலேரியாக் காய்ச்சல் வந்தது-கடைகளில் மருந்தெதுவும் இல்லை. மல்லாவி ஆசுப்பத்திரிக்குக் கொண்டு ஓடினம். அங்கையும் மருந்தில்லை. பிள்ளை மருந்தில்லாமலே(ய ஏழாவது நாள் வலிப்பு வந்து மோசம் போய்ச்சு"

கொண்டதையும் நினைத்துப் பார்த்தேன்.

வரும் ஆபத்தை நாய் உணர்ந்து கொண்டதோ தெரியவில்லை, எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. வன்னியின் மீது பெரும் படையெடுப்பொன்றை சிங்கள இராணுவம் எடுக்கப்போவது அனைவருக்கும் தெரிந்திருந்தது. படை நகர்வின் போதும் எறிகணை, விமானக் குண்டு வீச்சுக்களாலும் வன்னிமுழுவதும் மீண்டும் அல்லோலகல்லோலம் அடையப் போவதையும் பெரும் அவலம் நேரப் போவதையும் மக்கள் உணர்ந்திருந்தனர். எனவேதான் தூக்கக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு மக்கள் பாதுகாப்பான இடத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். இது எத்தனை யாவது இடப்பெயர்வோ தெரியாது.

மீண்டும் நாயைப் பார்த்தேன். நாய் படுத்து முனகிக்கொண்டிருப்பதைக் கண்டேன். வேதனையால் ஊழையிட்டு அழுவது தெரிந்தது. குட்டிகள் தாயின் மடியை தம் சிறுதலைகளால் முட்டிமோதி இடித்துக்கொண்டிருந்தன. முலைக் காம்புகளை வாயால் பிடித்து சூப்பிக் கொண்டிருந்தன. நாய் தொடர்ந்து கத்திக்கொண்டிருந்தது எனக்கு ஆச்சரி யத்தை அளித்தது. நான் கிட்ட நெருங்கினேன். நாய்க்குட்டி ஒன்று முலைக்காம்பிலிருந்து வாய் விடுபட்டு என்னை நோக்கித் திரும்பியபோது திகைத்துப் போனேன். அதன் வாயில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

இந்தக் குட்டிகள், தாயின் பால் வற்றிய முலையிலிருந்து அதன் இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருக்கின்றனவா? தாய் இறந்துபோனால் இக்குட்டிகளின் கதி என்ன? என்ற கேள்விகள் தொக்கி நிற்க எனது கடிகாரத்தைப் பார்த்தேன். 2.45 மணியாகி இருந்தது. எனது காவற் கடமைக்குத் திரும்பும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்தேன். தோளில் இருந்த எனது துப்பாக்கியை சரி செய்து கொண்டு களம் நோக்கிச் செல்லத் திரும்பினேன். ✷



# தாண்டிக் குளத்திலோர்.....

என்பனவற்றில் இடம்பெற்ற கட்டுரைகள், ஆசிரியர் தலையங்கங்கள் போன்றவற்றிற்குக் கொடுக்கப்பட்ட தலைப்புக்களாகும்.

வெறும் வாயை மெல்லுகிற இந்தப் பத்திரிகைகளுக்கு ஓமந்தை, நெடுங்கேணி, பெரியமடுவை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றியது, கைநிறைய அவல் கிடைத்த மாதிரிப்பேய்விட்டது.

வன்னிப் பெருநிலத்தை மூன்றாக வெட்டி, புலிகளை அவற்றுக்குள் முடக்கிவிட்டதாகவும், முடக்கப்பட்ட விடுதலைப் புலிகளை சிங்கங்கள் வேட்டையாடப் போவதாகவும் இந்தப் பத்திரிகைகள் கொக்கரித்தன.

இவைகூடப் பரவாயில்லை என்பது போல், சில கட்டுரையாளர்கள் கற்பனைக் குதிரையை வாயுவேகத்தில் தட்டிவிட்டார்கள்.

"பிரபாகரன் இந்தியாவிற்குத் தப்பியோடிவிடாமல் பாக்கு நீரிணையில் சிறிலங்கா கடற்படை தீவிர கண்காணிப்பு"

"பிரபாகரனுக்கு அரசியல் அடைக்கலம் கொடுக்கக்கூடிய நாடொன்றை சிறிலங்கா தேடிக்கொண்டிருக்கிறது."

இப்படி, பாதுகாப்புத் துணைமந்திரி ரத்வத்தையும் சிங்களப் பத்திரிகையாளர்களும் வர்ணவர்ணக் கனவுகளைக் கண்டு கொண்டு வானத்தில் பறந்துகொண்டிருந்தபோதுதான், பிரபாகரனும் அவரது புலிப்படையும் யூன் மாதம் 10ம் நாள் (செவ்வாய்க்கிழமை) விடிகாலை 2.30 மணிக்கு அவர்களது கனவுகளைக் கலைத்தார்கள்.

தாண்டிக் குளத்துக்கும், நொச்சிமோட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் ஊடுருவிய விடுதலைப் புலிகள், "மின்னல் வேகத் தாக்குதல்" என்பார்களே அப்படியான ஒரு அதிரடித் தாக்குதலை மேற்கொண்டார்கள்.

தாண்டிக்குளம், சிறிலங்கா இராணுவத்தின் 55வது பிரிகேட்டின் தலைமையகம் விடுதலைப்புலிகளால் தவிடுபொடி செய்யப்பட்டது. இதனை ரொயிட்டர் செய்தி நிறுவனம், 'Pulverised' என்று வர்ணித்தது.

சிங்களக் கூலிப்படைக்கு, துவக்குத் தூக்கக்கூட அவகாசம் இருக்கவில்லையாம்.

சிறிலங்கா இராணுவத்துக்கு, சாமரை வீசும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் Situation Report எழுதும் இக்பால் அதாஸ் நாடக பாணியில் விடுத்லைப் புலிகளின் தாக்குதலை வர்ணித்திருக்கிறார். அதை அப்படியே கீழே தருகிறேன் படித்துப் பாருங்கள்:

But unknown to them, from his hideout somewhere in the jungles of nedunkerny. LTTE leader, Veluppillai Prabhakaran, was busy making other plans that were to delay the line-up. He ordered his confidant Karuna (the Batticaloa military wing leader) to launch a counter offensive.

That Monday whilst 'Jaya Sikuru' troops were taking a well earned rest. Karuna and his men trekked through the jungles and pathways (west of the Vavuniya- Jaffna highway) towards Thandikulam. The move of some 600 heavily armed LTTE cadres, both young men and women who towed artillery guns, took even the intelligence community by total surprise. The arsenal that moved with them included Rocket Propelled Grenades, their improvised Arul Grenades, Machine Guns and double cabs mounted with Fifty Calibre guns.

As night fell on monday, men at the 55 division Head quarters at Thandikulam, mostly from Artillery, signals corps and a few from military Inteligence, sat down for a hot meal. Radio traffic on the communication sets at the Division Headquarters were mostly routine and less tense since the troops in the battle field were resting.

When the night grew, in marked contrast to the burst of shell and crackle of gun fire that rendered the air when 'Operation Jaya Sikuru' began, there was unusual calm not only in Thandikulam but also in Vavuniya. Hours ticked by and Tuesday dawned.

Around 2.10 am, loud explosions rendered the air Artillery Shells began to rain on Vavuniya town and its environs. Some landed on the Sri Lanka Air Force Base whilst others fell at the adjoining Headquaters of Task Force........

இதே Sunday Times பத்திரிகையில் (15-06-97) தாரகி எழுதும் போது, "தாண்டிக் குளத்தில் சிங்களப் படை தமிழ்ப் பொதுமக்களிடம் வேட்டிகளை வாங்கி உடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின், "செய் அல்லது செத்து மடி" என்ற இத்தாக்குதலில் 300க்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். காயப்பட்டவர்களின் எண்ணிக்கை 800 ஆக மதிப்பிடப்படுகிறது. காணாமல் போனவர்களின் தொகை 166. இன்னொரு விசேடம், பல நடுநிலை இராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிகளால் சிறை பிடிக்கப்பட்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளால் அள்ளப்பட்ட ஆயுதங்கள் போக, மிகுதி அழிக்கப்பட்ட ஆயுத தளபாடங்களின் பெறுமதி 856 கோடி ரூபா என மதிப்பிடப்படுகிறது. இதில் யுத்த டாங்கிகள், தாண்டிக்குளம் பீரங்கி ஏவுதளம் என்பன அடங்கும்.

'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்கு தலைவர் பிரபாகரன் பதிலடி கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும், அது தாண்டிக் குளமாக இருக்கும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

எதிரி எதிர் பார்த்ததை, எதிர் பாராதவிதமாக நடத்திக்காட்டுவதே தலைவர் பிரபாகரனின் தனித்துவம்.

விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதலைப் பார்த்துவிட்டு, நாங்கள் கைதட்டினால் மட்டும் போதாது. தலைவர் பிரபாகரன் தன் தோளில் சுமக்கும் பளுவில் ஒரு விழுக்காட்டையாவது நாங்கள் சுமக்க முன்வரவேண்டும்.

மாற்று இயக்கங்களிலிருக்கும் தோழர்களுக்கு ஒரு வார்த்தை. "அப்பன் வெட்டிய கிணறு உப்புத்தண்ணீராக இருந்தாலும் குடித்தே தீருவேன்" என்று தமிழீழ விடுதலையைக் கைவிட்டு, கைவிட்டதுமல்லாமல் அதைக் காட்டிக்கொடுக்கும் கயவர்களில் தலைமையைக் கைகழுவிவிட்டு, தேச பக்தர்களின் அணியில் சேருங்கள்.

துணைப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த போன்ற நந்தவனத்து ஆண்டி இருக்கும் வரை விடுதலைப் புலிகளின் வெற்றி நிச்சயம். தாண்டிக் குளம் அதற்கு அருமையான அத்தாட்சி. அங்கே ரத்வத்த தோண்டியைப் போட்டு உடைத்திருக்கிறார். தாண்டிக்குளம், ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் ஒத்திகைதான். விடுதலைப் புலிகளின் அதிரடிகள் இனித்தான் தொடர இருக்கிறது.

வன்னி மண்ணில் முயல் நாயைத் துரத்துமாம். புலி எதிரிப் படையை அந்த மண்ணில் இருந்து நிச்சயம் துரத்தும்.

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?

'வெற்றி நிச்சயம்' கேள்விக்குறியாகி, 'தோல்வி நிச்சயம்' ஆச்சரியக்குறியாகிவிட்டது. ✷

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 01 - 08 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, LondonSE1 4QB.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# வரலாறு சொல்லும் பாடம் - திபெத்

உலகின் கண்களுக்கு நன்கு தெரிந்தும் – தெரியாதது போல பாவனை செய்யப்படுவதால் 'திபெத்' மக்கள் இன்று பெரியளவில் இனப்படு கொலைக்கு ஆளாகி வருகிறார்கள். முன்னொரு காலத்தில் திபெத் சுதந்திரத் தனி நாடாக இருந்து வந்தது. சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் திபெத் சிறிது சிறிதாக தன் இறைமையை



இழந்து வந்தது. சீன அரசை எதிர்த்து திபெத் மக்கள் சார்பாக அதன் தார்மீகத் தலைவர் 'தலாய்லாமா' குரல் கொடுத்தார். அவரின் நியாயமான கோரிக்கைகள் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

திபெத்தின் சுதந்திர உணர்வினை சிறிதும் ஏற்றுக் கொள்ளாத சீனா – திபெத்திய மக்கள் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. விசாரணைகள் எதுவுமின்றி மக்கள் கைது செய்யப்படுவதும் – கண்ட இடத்தில் வைத்தே சுட்டுக் கொல்லப்படுவதும் நாளாந்தம் நடக்கும் நிகழ்வுகளாகப் போய்விட்டன.

திபெத்திய நாடு இறைமையுள்ள சுதந்திர நாடு என திபெத்தியர் குரல் எழுப்பியதை, சீனா தந்திரமாக அந்தப் பேச்சிற்கே இடமில்லாமற் செய்ய முற்பட்டது. அதற்காக, திபெத்துக்குள் இராணுவத்தின் கொடூரச் செயல்களை பூரணமாக அனுமதித்தது. திபெத்துக்குள் திபெத்தியரை சிறுபான்மையினராக்க – சீனாவில் கடும் குற்றச் செயல்கள் புரிந்தோரை திபெத்தில் குடியேற்றியது. திபெத்தியப் பெண்களை சீன இராணுவத்தினர் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கினர். பலவந்தமாக சீனர்களுடன் இனக்கலப்புச் செய்யப்பட்டது.

திபெத்திய மக்களின் ஆன்மீகத் தலைவர் – தலாய் லாமாவும் – அவரின் உதவியாளர்களும் – சீன இராணுவத்தால் திபெத்தின் மூலை முடுக்கெல்லாம் சல்லடை போட்டுத் தேடப்பட்டனர். பல தீவிரவாதிகள் சீன இராணுவத்தினரால் அங்கங்கள் துண்டிக்கப்பட்டு வீதிகளில் வீசப்பட்டு கொல்லப்பட்டனர்.

சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்த, தலைவர் தலாய்லாமா இந்தியா சென்று அடைக்கலம் பெற்றுக் கொண்டார். வெளிநாட்டிலிருந்து உலக நாடுகளின் கவனத்தைத் திபெத்தின் பக்கம் திருப்ப தலாய்லாமா பெரிதும் பாடுபட்டார். இந்த முயற்சி சீனாவைச் சீற்றங் கொள்ள வைத்தது. திபெத்தியரை முற்றாக அழிக்கும் நோக்கு





THE TIBETAN FLAG

டன் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மதகுருமார் அடிமைகள்போல் கொண்டு செல்லப்பட்டு மிகக் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர். வழிபாட்டுத் தலங்களெல்லாம் இராணுவ முகாம்களாக மாறின. தலாய்லாமா என்ற தலைவரின் பெயரை உச்சரிக்கக் கூடாதென மக்களின் நாக்குகள் புண்ணாக்கப்பட்டன. சீன அரசிற்கெதிராகப் பேசினார்கள் என்று பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் – பணம் கறப்பதற்காக எத்தனையோ திபெத்தியர் கொன்றொழிக்கப்பட்டனர். ஆண்டவனை வழிபடுகிறார்கள் என்று அநாகரிகக் குற்றஞ்சாட்டின் பேரில் பல்லாயிரக்கணக்கானோர் சூடுபட்டு – தடியடிபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, உயிருடன் புதைக்கப்பட்டு– நீரில் மூழ் கடிக்கப்பட்டு– துண்டு துண்டாக வெட்டப்பட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

அந்தச் சிறிய நாட்டின் சனத்தொகையில் 12 லட்சம் மக்களை உலகின் மிகப் பெரிய நாடு ஏப்பம் விட்டு விட்டது. பலவந்தமாக ஒரு இனத்தின் விகிதாசாரத்தை மாற்ற முனைவதும், ஏதேச்சாதிகார கைதுகள் – சித்திர வதைகள் என்பனவும் பெருமளவில் நடைபெறுவதாலும் அங்கு மக்களின் சுதந்திரம் அடியோடு இல்லாமற் போய் விட்டது என ஐ. நா. சபை சீனா மீது குற்றச்சாட்டுச் சுமத்தியது. ஒரு நாட்டின் அரசு என்ற சலுகைகளால் சீனா அரசு தொடர்ந்து தப்பி வருகிறது. உலக நாடுகள் பலவும் – சிறிலங்கா கூட மனித உரிமைகளைப் பலவழிகளாலும் மீறி நின்று உலக நாடுகளிடம் பலவற்றைச் சொல்லித் தப்பித்து வருகிறது. உலக நாடுகளும் கண்டும் காணாமலும் இருந்து விடுகின்றன.

உயிர் வாழ திபெத்தியருக்கு உரிமையில்லை. உணவு, உடை கூட இராணுவத்தால் மட்டுப் படுத்தப்படுகிறது – அல்லது தடுக்கப்படுகிறது. நாட்டின் சுற்றாடல் அடியோடு மாற்றப் பட்டு வருகிறது. மனிதப் பிறவியே கேவலப்படுத்தப்படுகிறது. கேட்பார் எவருமற்ற நிலையில் திபெத்தின் சுதந்திரம் சீனாவின் பலமிக்க இராணுவத்தின் காலடியில் மிதிபடுகிறது. சீனாவின் உலகளாவிய கொள்கை திபெத்தின் குரலை நசுக்கி விடுகிறது.

உலக அரங்கில் பெரிதாக, மனித உரிமை – ஜனநாயகம் என்றெல்லாம் பேசும் நாடுகள், சீனாவைப் பகைத்துக் கொள்ள முடியாமல், திபெத்தில் நடக்கும் இனப்படு கொலையைப் பற்றி வாய் திறக்காமல், மௌனம் சாதித்து வருகின்றன. 1993 யூனில் வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் தலாய் லாமா பேச முடியாதவாறு சீனாவால் தடுக்கப்பட்டார். நோபல் பரிசினைப் பெற்றிருக்கும் 'தலாய்லாமா' அதற்கான கூட்டங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. எல்லாம் சீனாவின் செல்வாக்கு.

> திபெத்திய நாடு இறைமையுள்ள சுதந்திர நாடு என திபெத்தியர் குரல் எழுப்பியதை, சீனா தந்திரமாக அந்தப் பேச்சிற்கே இடமில்லாமற் செய்ய முற்பட்டது. அதற்காக, திபெத்துக்குள் இராணுவத்தின் கொடூரச் செயல்களை பூரணமாக அனுமதித்தது. திபெத்துக்குள் திபெத்தியரை சிறுபான்மையினராக்க - சீனாவில் கடும் குற்றச் செயல்கள் புரிந்தோரை திபெத்தில் குடியேற்றியது. திபெத்தியப் பெண்களை சீன இராணுவத்தினர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். பலவந்தமாக சீனர்களுடன் இனக்கலப்புச் செய்யப்பட்டது.

உலகத்தின் உயர் மட்டக் கொடுமைகள் எல்லாம் திபெத்தில் சீன அரசு செய்து வந்த போதிலும், மக்கள் அஞ்சி ஒடுங்கி தம் சுதந்திரத்திற்கான முயற்சியைக் கைவிட்டு விடவில்லை. தமது நோக்கில் மேலும் தீவிரமாக உள்ளனர். மரணம் அல்லது சுதந்திரம் என்ற இறுக்கமான நெறியில் திபெத்தியர் வாழ்கின்றனர்.

திபெத்திய மக்களின் தளராத உறுதியும் - எள்ளளவும் அஞ்சாத மனோதிடமும் சுதந்திரத்தை நாடி நிற்கும் எமக்குப் பாடமாக அமையும், எமது தலைமையில் நாம் கொண்ட உறுதியும் சுதந்திரத்தில் வைத்துள்ள பெருவிருப்பும் எம்மை வெகு விரைவில் சுதந்திர மக்களாக்கும்.

- முகிலன் (தமிழீழம்)

ஈழத்தமிழர் விளையாட்டு ஒன்றியம் நெதர்லாந்து நடாத்தும்

மாவீரர் வெற்றிக் கிண்ண
மென்பந்து துடுப்பெடுத்தாட்டம்

காலம்:
19.07.97 சனி, காலை 9.00 மணிக்கு

இடம்:
M.O.P, Complex ( Cricket Vereniging )
Bergehuizensestraat, ( Sportpark ) Berghuizen

மேலதிக தொடர்புகளுக்கு:
செல்வம்: 0251-374680, யோகன்: 0344-610885, ரவி: 0168-464012

ஈழத்தமிழர் விளையாட்டு ஒன்றியம் நெதர்லாந்து

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
(கல்விச் சேவை) நடாத்தும்

சுவிஸ் தமிழ் பாடசாலைகளுக்கிடையிலான.
சுவட்டு மைதான மெய்வல்லுனர் போட்டி

காலம்:
12.07.97 சனி, காலை 8.00 மணிக்கு

இடம்:
Manessestrasse, Sihlhölzli Sportplatz, Zürich

செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு
நிலையநிதிக்காக

உலகத்தமிழர் விளையாட்டுக்கழகத்தால்
ஒழுங்கு செய்யப்படும்

மாபெரும் உலகத்தமிழ்
துடுப்பெடுத்தாட்ட சுற்றுப் போட்டி

காலம்:
12.07.97 சனி, காலை 8.30 மணிக்கு

இடம்:
Warren Farm Sports Centre,
Windmill Lane, Southall

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் "துயர் துடைப்பு வாரம்" ஜுலை 05 முதல் 13 வரை

சிறிலங்கா இராணு வத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளினால் தமது சொந்தவாழ்விடங்களை விட்டு ஏதிலிகளாகிய எமது மக்களின் துயர் துடைக்க வெளிநாடுகளில் வாழும் நாம் எம்மாலான அதி கூடிய மனிதாபினான ரீதியிலான பங்களிப்பைச் செய்ய முன் வரவேண்டும். தமிழீழத்தில் இடம் பெயர்ந்து, இருக்க இடமன்றி, உண்ணப் போதிய உணவின்றி, உடுக்க உடையின்றி, மருத்துவ வசதிகளின்றி அல்லறும் எம்மக்களுக்கு நாம் உடனடியாக உதவிகள் செய்ய வேண்டியுள்ளது.

இதற்கென ஜுலை மாதம் 5ஆம் திகதி யிலிருந்து 13ஆம் திகதி வரையிலான நாட்க ளைத் துயர்துடைப்பு நாட்கள் எனப் பிரகடனம் செய்து அனைத்துலக ரீதியாகச் சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சகல தமிழீழ மக்களும் சகல வேறுபாடுகளையும் மறந்துவிட்டு பங்கேற்றுக் கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது. சுமார் ஒரு இலட்சம் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறித் தற்காலி கமான இடங்களில் வசித்து வருகிறார்கள். சிறிலங்கா அரசும் இராணு வமும் மேற்கொள்ளும் பொருளாதாரத் தடையினாலும் நிவாரணங்கள் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளினாலும் இடம்பெயர்ந்த மக்கள் எந்தவித உதவிகளும் இல்லாமல் மிகவும் கஷ்ட மான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழத்தில் இருந்து புலம்பெயர்ந்த சுமார் 3 இலட்சம் மக்கள் வெளிநாடுகளில் வாழ்கிறோம். எமக்கிடையே நிதியைத் திரட்டி தமிழீழத்தில் இடம்பெயர்ந்து அல்லலுறும் நம் மக்களின் துயர் துடைப்போம்.

நாளாந்தம் சிறிலங்கா அரசின் அனர்த்தங்களால அகதிகளாகிக் காடுகளில் தஞ்சமடைந்துள்ள எமது மக்களை நாம் கண்டும் காணாதது போல இருப்பது எந்த விதத்தில் நியாயமாகும்.

தமிழினமே! இந்த நிலையிலும் நாம் ஒன்றும் செய்யாது வாளாவிருந்தால் அவலத்தில் உதவாத புலம் பெயர்ந்த தமிழினம் என்று நாளைய வரலாறு எம்மைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தாதா?

அன்பான தமிழினமே!

காலத்தால் செய்யாத உதவியால் என்ன பயன்? காலம் கடக்கு முன்பாக ஒரு 50 பவுண்களுக்கு அல்லது அதற்கிணையாக நீங்கள் புலம் பெயர்ந்து வாழும் நாட்டுப்பணத்தில் உடனடி யாக அனுப்பி உதவுக. நாம் இந்த துயர் துடைப்பு வாரத்தில் மட்டும் பெருந்தொகையான பணம் சேகரித்து எம்மவர்களின் துயர் துடைக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். சிறுதுளி பெரு வெள்ளமாகப் பெருகட்டும். ஒவ்வோர் தமிழனும் தன்னாலான பங்களிப்பைச் செய்ய முன்வரட்டும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முன்னெடுக்கப் படும் அனைத்துப் பணிகளுக்கும் பெருந்தொகை யில் நிதியுதவி தேவைப்படுகிறது. உடனடி உயிர் காக்கும் தேவை முதற்கொண்டு உணவு, உடை, தங்க வதிவிடம், எதிர்காலத்தில் அவர்கள் தாங்களாகவே தங்களைப் பராமரிக்கும் நிலை ஏற்படும் வரை போதிய ஆதாரம் அளிப்பதோடு ஆகியவற்றைப் பெரும் கட்டுக்கோப்போடு கழகம் நடாத்துவதுடன் இதர அரச சார்பற்ற கழகங்க ளுக்கும் ஓர் ஆதார அமைப்பாக, அவர்களின் பணிகளைச் செவ்வனே செய்ய முன் நின்று உழைக்கும் நிறுவனமாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனித்தும் சேர்ந்தும் செயலாற்றி வருவதை நீங்கள் நன்கு அறிவீரகள்.எனவே நீங்கள் அளிக்கும் நிதியுதவி அனைத்தும் எமது மக்களின் இன்னல்கள் தீர்க்க, அவர்களது உடனடித் தேவைகளைக் கவனிக்க இன்னும் பல வழிவகைகளில் உதவுகின்றது.

நாம் காலம் தாழ்த்தும் ஒவ்வொரு நிமிடமும் எமது தாயகத்தில் எத்தனையோ தமிழ் மக்கள் உணவின்றி, மருந்தின்றி, குடிநீரின்றி தங்க இடமின்றி, ஏதிலிகளாத் துன்பமே வாழ்க்கையாக் கிக் கொண்டு தம் நிலையைச்சொல்ல எவருமின்றி தவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது. தங்கள் வசதிக் காக பிரித்தானியாவில் 5 மேலதிக இணைப்புக்கள் இணைக்கப்பட்ட தொலைபேசி வசதியூடாக நீங்கள் உங்கள் பங்களிப்புக்களைத் துயர் துடைப்பு வாரமுதல் 48 மணி நேரத்தில் உறுதி செய்க. நீங்கள் உங்கள் பங்களிப்புக்கான ஒழுங்கான மாதாந்த நிரந்தர பணமாற்றுப் படிவத்தை நிரப்பி அனுப்புவதன் மூலம் உதவலாம்.

**அன்பார்ந்த தமிழ் மக்களே!**

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு
**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்**
(பிரித்தானிய கிளை)
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow,
London E17 4SA
தொலைபேசி இல: 0181 - 520 5876

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்**

| | |
|---|---|
| TRO Canada: | Ph: (1416)463 7647 |
| TRO Denmark: | Ph: (4520)23 88 97 |
| TRO France: | Ph((331 46) 489 850 |
| TRO Germany: | Ph: (4921) 665 8508 |
| TRO U.K.: | Ph: (44181) 520 5876 |
| TRO Italy: | Ph; (39 91) 611 3179 |
| TRO Malaysia: | Ph: 603 255 2472 |
| TRO Netherlanl | Ph: 31 72 644 442 |
| TRO New Zealand ; | Ph: (649) 537 0258 |
| TRO Norway: | Ph: (47 22) 646 592 |
| TRO South Africa: | Ph: (27 471) 310 123 |
| TRO Sweden: | Ph: (4686) 870 649 |
| TRO Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| TRO U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| TRO Australia: | Ph:Fax:(613) 9800 3899 |

**துயர் துடைக்க வாரி வழங்குக**



## விடுதலைப் புலிகளின் தாக்குதல் எதிர்பார்த்ததை விட கடுமையானது 'ஏசியா வீக்" சஞ்சிகை தகவல்

தற்போதைய இராணுவ நடவடிக் கையில், எதிர்பார்த்ததை விடக் கடுமையான தாக்கத்தைச் சிறிலங்காப் படைகள் எதிர்கொண்டு வருகின்றன" இவ்வாறு சிறிலங்காவின் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கருதுவதாக, சிறிலங்கா இராணுவப் புலனாய்வு த்துறைத் தலைமையகத்துடன் நெருக்கமான தொடர்புடைய வட்டா ரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. இத் தகவலை அடிப்படையாகக் கொண்டு கொங்கொங்கிலிருந்து வெளிவரும் ஏசியா வீக்' சர்வதேச சஞ்சிகை இச் செய்தியை வெளியிட்டுள்ளது. "சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சகம், தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து தவறான மதிப்பீட்டைப் போட்டுக் கொண்டு இருக்கின்றது. ஆனால் நடைபெறும் தாக்குதல்களை வைத்துப் பார்க்கையில் விடுதலைப் புலிகளின் பலம் மேலும் மேலும் வலுப்பட்டுக் கொண்டே செல்கிறது போல் தெரிகிறது. அத்துடன் சிறிலங்காப் படையினரின் தொடர் இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளுக்கு மேலும் புதிய உறுப்பினர் களைச் சேர்த்துக் கொடுக்கின்றது. அரசு நினைப்பதுபோல், உறுப்பினர் களைத் திரட்டுவதில் அவர்களுக்கு சிரமம் இல்லை" என அச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் கண்டனக் கூட்டம்

இலங்கையில் சிங்களப் படையினர் ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்வதைக் கண்டித்து, 17-06-97 அன்று தமிழ்நாடு தலைநகர் சென்னையில் சைதாப்பேட்டை தேரடித் திடலில், சர்வகட்சிக் கண்டனக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. திராவிடர் கழகம் ஏற்பாடு செய்த இவ் அனைத்துக் கட்சி கண்டனக் கூட்டத்தில் திராவிடர் கழக பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி, திரு. பழ. நெடுமாறன், கலாநிதி ராமதாஸ், ஜனதா தள முன்னணித் தலைவர் கா. ஜெகவீரபாண்டியன் உட்பட பல கட்சித் தலைவர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். ✳

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
## TAMILS REHABILITATION ORGANISATION

தமிழீழம்
03.06.97

# சர்வதேச சமூகமே துன்பப்படும் தமிழீழ மக்களின் துயர்துடைப்பிற்கு உதவுங்கள்

1995, 1996, 1997ம் ஆண்டுகள் தமிழீழத்தைப் பொறுத்தவரையும் தமிழீழத்தில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையும் மிகவும் துன்ப துயரங்களைச் சந்தித்த ஆண்டுகளாகும்.

தமிழ் இனத்திற்கு எதிராக குறிப்பாக இலங்கையின் வடபகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய இராணுவநடவடிக்கைகள் பெரும் தொகையான மக்களை இடம் பெயர வைத்தது. 1995 – ஆடியில் யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட "முன்னேறிப்பாய்தல்" இராணுவ நடவடிக்கையில் இருந்து "ரிகன்பயர்", "கைகுலுக்கல்", "இடிமுழக்கம்", "சூரியக்கதிர் 1, 2, 3 ல் முடிந்து, வன்னிப்பகுதியில் "சத்ஜெய 1, 2, 3 ல் ஆரம்பித்து "எடிபல", "ஜெயசுக்குறு" எனத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இடம்பெயர்ந்ததனால் தமது வாழ்வு அடிப்படை வசதிகளற்று வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில் சூரியக்கதிர் 2, 3 இராணுவ நடவடிக்கைகளிலும், சத்ஜெய இராணுவ நடவடிககைகளிலும் இடம்பெயர்ந்த 50,000ற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அரச உலர் உணவு நிவாரணம் பெறமுடியாதபடி அரசு தடைச்சட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகின்றவேளை, 1997 வைகாசியில் இதுவரை பல இராணுவ நடவடிக்கைகளிலும் இடம் பெயர்ந்து உலர் உணவு பெற்று வந்த 1,04,910 குடும்பங்களைச் சேர்ந்த 4,21,462 பேரில் 58660 குடும்பங்களைச் சேர்ந்த 2,36,462 பேர்களில் உணவு முத்திரைகளை வெட்டி அவர்கள் உலர் உணவு நிவாரணம் பெறமுடியாதபடி நடைமுறைச்சட்டத்தை அமுலாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த வகையில் வன்னிப்பகுதியில் நான்கு மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் வாழும் இந்த மக்கள் பெரும் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

மேலும் இவ்வாறான தடைச் சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ள அரசு. தொடர்ச்சியான பொருளாதாரத் தடைச்சட்டங்களையும் கடல்வலயத் தடைச்சட்டங்கள் போன்ற தொழில் வலயத் தடைச்சட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருவதோடு தனது அரச நிதியில் செயற்படுத்தப்படும் நிவாரணப் புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்களையும் மட்டுப்படுத்தி மிகவும் குறைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற முன்வந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களையும் அவற்றின் சேவைகளையும் மட்டுப்படுத்தியும், கட்டுப்படுத்தியும் வருகிறது. இதனால் நிரந்தரமாக நிம்மதியாக வாழ்ந்த மக்கள் தொழில் இழந்து தொழில் வாய்ப்பு கிடைக்காத நிலையிலும் சமூக அபிவிருத்தியை அடைய முடியாத நிலையிலும் தமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும் சமூகத்தின் சுகவாழ்வுக்குத் தேவையான அடிப்படை சுகாதாரத்தைப் பேணும் குளோரின், மலத்தியன் போன்ற பொருட்களுக்கும், மருந்துப் பொருட்களுக்கும் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ள சிறிலங்கா அரசு தமிழ் இனத்தின் சுகவாழ்வையே பாதிக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இந்த வகையில் அரசு தனது நிதி ஒதுக்கீடுகளையும் நிதிச்செயற்பாடுகளையும் தமிழ் மக்களுக்கு மிகவும் குறைத்து சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளையும் மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் வரும் சூழ்நிலையில் தமிழீழப்பகுதியில் ஒரே ஒரு தேசிய அரசசார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிவாரண புனர்வாழ்வு அபிவிருத்திப்பணிகளில் முன்னின்று உழைத்தும் சேவையாற்றியும் வருகிறது.

**அன்பான சர்வதேச சமூகமே !**

* தமிழீழத்தில் இடம்பெயர்ந்து உயிரிழந்து, உடமையிழந்து, உரிமையிழந்து, வலுவிழந்து, வாழ்விழந்து, உறவுகளைப்பிரிந்து, அடிப்படைவசதிகளற்று அல்லல்பட்டு அவதிப்பட்டு துன்பதுயரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் சமூகத்தைக்காப்பாற்ற தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு உதவுங்கள்.

* இடம் பெயர்ந்ததனால் தமது வாழ்வு நிலைகளை இழந்தும் வாழ்வு இயக்கங்களை இழந்தும் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி நிற்கும் தமிழ்சமூகத்தின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து செயலாற்ற முன் வாருங்கள்.

* அரசினுடைய அடக்குமுறைகளினாலும் தடைகளினாலும், தடைச்சட்டங்களினாலும் உணவற்று, உறைவிடமற்று சுகமிழந்து போசாக்கிழந்து கல்விமிழந்து ஏங்கி நிற்கும் குழந்தைகளினதும் சிறுவர்களினதும் மாணவர்களினதும் வளமான சிறந்த எதிர்காலத்திற்கும் நல்வாழ்விற்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் புனிதமான சேவையிலும் பாதையிலும் பணிபாற்றுவதற்கு நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

சி. விபுலேந்திரன்
இணைப்புச் செயலாளர்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்.

## தார்மீகப் பலம் ....

நிலை நிறுத்திக்கொண்டனர். அரசியல் யாப்பில் எச்சட்ட திட்டத்தினையும் உதாசீனம் செய்ய அவசரகாலச்சட்டம் இவர்களுக்கு வாய்ப்பாக இருந்தது. இதே வழிமுறையைத்தான் தற்பொழுது ஆட்சியில் உள்ள சந்திரிகா அரசும் கைக்கொள்ள முனைகிறது. வடக்குக் கிழக்கில் புலிகளுடனான போருக்கும் மக்களை அழிப்பதற்கான நடவடிக்கைக்கும் உதவுவதோடு, தென்னிலங்கையில் தமது அரசியல் எதிரிகளையும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவும் இச்சட்டத்தைப் பயன் படுத்துகின்றது. இந்த வகையில் அமைந்ததே, முன்னாள் அமைச்சர் சிறிசேன கூறே தற்போது கைது செய்யப்பட்டுள்ளமையாகும். இந்த ரீதியில் ஐ.தே.கட்சி தனது ஆட்சியின் போது மேற்கொண்டவற்றையே தற்போது பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஆகையினால், இதனைக் குறை கூறுவதற்கு ஐ.தே.கட்சிக்குத் தார்மீக பலம் இல்லை. அதேவேளை, பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சி ஐ.தே.கட்சியில் இருந்து வேறுபட்டதாக இல்லை என்பதையும் வெளிக் காட்டுகின்றது. இச்சட்டங்களினால் எப் பொழுதுமே பாதிப்புக்குள்ளாகிக்கொண்டு இருக்கும் மக்கள் கூட்டத்தினர் இச்சட்டங்களுக்கு எதிராக மட்டுமல்ல, ஆட்சியாளர்களின் ஒட்டுமொத்த நடவடிக்கைக்கு எதிராகவும் குரல் கொடுப்பதற்குத் தார்மீகப்பலம் கொண்டவர்களாகவே உள்ளனர். ஆனால், சிங்கள மக்கள் இன்று அந்தளவிற்கு விழிப்புடன் இல்லை என்பதே யதார்த்தமாகும். ✷

**நன்றி : ஈழநாதம்**

## இராணுவத்திற்கு ....

உள்ள நிலையில் அதாவது போர் முடிவுக்கு வராத நிலையில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் எந்த அரசியல் தீர்வினாலும் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. இந்த வகையில் விடுதலைப் புலிகள் தாண்டிக்குளத்தில் நடாத்திய தாக்குதலினால் தனியாக சிறிலங்கா அரசின் இராணுவ ரீதியான எதிர்பார்ப்புக்களை மட்டும் சிதறடிக் கவில்லை. அதன் எதிர்கால அரசியல் திட்டங்களை அல்லது அபிலாசை களைக் கலைத்து விட்டது என்றே கூறலாம். இந்த வகையில், தாண்டிக்குளம் தாக்குதலானது சந்திரிகா அரசுக்கு இராணுவத் தோல்வி ஒன்றை மட்டும் வெளிப்படுத்தவில்லை. அதன் அரசியல் தோல்வியையும் வெளிக் காட்டும் ஒன்றாகவே உள்ளது.

**நன்றி : ஈழநாதம்**

### திருத்தம்

18.06.97 இல் வெளியான 'களத்தில்' செய்தித்தாளில் 8 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரையில் *பேராசிரியர் துரைராசா அவர்களின் ..* என்ற பெட்டிச் செய்தியில் இடம் பெற்ற '*வாழ்வைச் விதைத்துவிட*' என்ற சொற்றொடரை '*வாழ்வைச் சிதைத்துவிட* 'என்று திருத்தி வாசிக்குமாறு அன்புடன் வேண்டு கிறோம்.




## யாத்திரை

புண்பட்ட நெஞ்சோடு புறப்பட்டு விட்டீரோ?
வாழ்ந்து முடித்து விட்டோமே
வாழ்வு இனி நமக்கெதற்கு - என சலித்து
பிறந்த மண்ணில் நீங்கள் பயந்துறங்கவில்லை - ஓ
உம் மக்களும் மண்மீட்புப் போருக்குப் புறப்பட்டனரோ?
இது அகதி யாத்திரை அல்ல.
சுற்றத்தோடு கூடி சுதந்திர பூமியில் கால்பதிக்க
நீங்கள் வேண்டியே செல்கின்ற புனிதயாத்திரை!

–மாதினி குணசீலன்

## புலிகள் நிலம் நோக்கி......!

வாழ்விழந்தோம்
வள நிலமிழந்தோம்
மனை இழந்தோம்
மக்கள் இழந்தோம்
இழக்கவில்லை மானமும் வீரமும்
போகின்றோம் புலிகள் நிலம் நோக்கி
மீண்டும் வருவோம் எம்மண்ணில் வாழ
வீரம் நிறைந்த வேங்கைகள் பின்னே!

–ஜெ. லக்ஷாமினி, யேர்மனி.



## தொடர்கிறது பயணம்

உணவுத்தடையால் உருக்குலைந்த தேகம்
உரமுடைமேல் மூடைகட்டி
உருளுகிறது துவிச்சக்கரவண்டி
ஊருக்குள் ஆயுதப்பேய்கள்
கனடா மகனின் போட்டோவும்
முதுமைக்குக் கைகொடுக்கவில்லை–இருந்தும்
சூரியத்தலைவனைத் துணிவுடன் நம்பி
தொடர்கிறது பயணம்.

– கைலம்மான் , பிரான்ஸ்

## துணிந்திட்டோம்!

அன்னியன்கொடும் பகைக்குள்
அமைதியில்லா வாழ்வைநொந்து
புண்ணாகி மனம்நோகப்
புறப்பட்டோமிடத்தை விட்டு!
வாடியலையும் எம்மவர்க்கு
வாழப்பொருள்கொடுத்துதவி
வாழும்வரை உறுதியுடன்
வழிநடக்கத் துணிந்திட்டோம்!

– வேணுகோபாலன், யேர்மனி.

## தமிழீழம் வென்றிடுவோம்!

எத்தனை நாள்தான் எதிரியே– எம்மை
அகதிகளாய் அலைய வைப்பாய்
பட்டினிபோட்டு எம் உடலை
பலவீனப்படுத்தினாலும் – குண்டுகளை
அள்ளிவீசி உயிரைக் குடித்தாலும்
எம் தலைமகன்– பாதையிலே
சலிப்பின்றி நடைபோட்டு
தமிழீழம் வென்றிடுவோம்.

– நா. பாமினி, பிரான்ஸ்

## விடியலுக்காக.....

கைகளில் பாரங்கள்! மனங்களில் சுமைகள்!!
கால்களில் கல்லுறுத்த தலையினில் வெயில்கொளுத்த
வெட்ட வெளியில் காண்பது கானல் நீரா? – இல்லை
நாடிழந்தோம்! வீடிழந்தோம்!! உற்றார் உறவிழந்தோம்!!!
உணர்வும் இழந்தோமா?
நெஞ்சினில் உரமுண்டு! உடம்பினில் வலுவுண்டு!!
தலைவன் வழிகாட்டலில் எம்சந்ததிக்கோர்
விடியலுண்டு!

-தனம், பிரான்ஸ்

களத்தில் ஆசிரியர் அவர்கட்கு,

21–5–1997 திகதியிடப்பட்ட 'களத்தில்' பத்திரிகையில் புலிகளின் ஆயுதப் போரும் அரசியல் நோக்கும் என்ற கட்டுரை எமது தாயக மீட்புப் போரின் மகத்துவத்தையும் யதார்த்தத்தையும் உணர்த்தி நிற்கின்றது. களத்தில் பல விடயங்கள் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்து தாயகச் செய்திகளைத் தாங்கி வலம்வர எனது வாழ்த்துக்கள்.

–ஜெ. லக்ஷாமினி, யேர்மனி

மதிப்புக்குரிய களத்தில் ஆசிரியர் அவர்கட்கு,

இரண்டு வருட காலமாக களத்தில் பத்திரிகையை வாசிக்கின்ற வாசகர்களில் நானும் ஒருவன். வாசிப்பது மட்டுமின்றி எனது அங்கம்போல் களத்தில் பத்திரிகையைப் பாதுகாத்தும் வருகிறேன்.
தமிழீழத்தை மறந்து, சுயநலத்துடன் கடல் கடந்து தஞ்சமடைந்த எங்களுக்கு இப்பத்திரிகை நீங்கள் தமிழ்த் தாய் பெற்ற பிள்ளைகள் (மைந்தர்கள்) என்றுணர்த்தி, தமிழீழப் பற்றையும், பொதுநலத்தையும், புரிந்துணர்வுத் தன்மையையும் சிறுபிள்ளைக்குப் பாலூட்டுவதுபோல் ஊட்டி நிற்கிறது. எம்மைப் போன்ற இளைஞர்கள் மனம் மாறி நாட்டுக்காக நிறைய உதவிகள் செய்வார்கள் என்று களத்தில் பத்திரிகை நம்பிக்கை வைத்திருக்கின்றது உண்மை.
இப்பத்திரிகை மேன்மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துகிறேன்.
வணக்கம்.

'களத்தில்' நண்பன், எழுதுமட்டுவாள் க.ம. சிறிரஞ்சன், யேர்மனி.

**ஆக்கங்கள் அனுப்பியோரின் விபரங்களை நன்றிகூர்தலுடன் பிரசுரிக்கின்றோம்:**

கௌரி லோகநாதன், பூபதி, உடுத்துறை சுரேஷ், செ. அபிராம், மதுபாலா, திருநாவுக்கரசு திருஷ்ஜா, மா. சிவகுமார், கிருஷ்ணா, ஈழமகன், நாவல் அருண், ஈழதீசன், சிறிக்குமார், க. சிறிகந்தராசா, தி. ஜெயராசன், மெ. சந்திரன்.
நோர்வே – செல்வி நர்மதா யோகி,
நெதர்லாந்து – ஈழத்தமிழ் அமுதன் ,
இத்தாலி – காரை ந. சேகர் ,
டென்மார்க் – து. ஜெயக்குமார்
சுவிற்சலாந்து – நடராஜா சந்திரகுமார்,
யேர்மனி – எஸ்.கே. குமார்,
யேர்மனி – எஸ். சுரேஸ்குமார்

www.tamilarangam.net






# "வெற்றி நிச்சயம்" யாருக்கடி அக்கா?

தாண்டிக்குளம் . . .! தாண்டிக்குள முகாம் . . .!
ஐய்யோ . . .!
கொலைவெறி . . . இனவெறி . . .
காமவேட்கை . . .
உயிர்க்கொடி பிடுங்குமிடம்
அரக்கனின் கூடாரம்
இரவு - பகல் வேறுபாடில்லை. அங்கு
பிசாசுகள் சஞ்சரிக்கும்.
மங்களகரமான தோற்றங்கள்
எதுவுமே அதன் கண்களை
கோரமாய் துன்புறுத்தும்.
வக்கிரமற்ற எந்த ஜீவராசிகளும்
அதன் பாதையில் வழிமறிக்கப்படும்.
மனிதம், புனிதம் - அதன்
பசிபோக்கும் பண்டங்கள்.
நேற்றுவரை, பூலோகத்து
நரகக் கிடங்காய் . . .
எத்தனை பேரை பலிகொண்டது!
கருக்களும் சிசுக்களும்
குழந்தைகளும் இளசுகளும்
முதியோரும் என்னவாகினர்?
கேட்டவரும் காணாமற் போனார்.
இந்த அநியாயங்கள் யாவும்
தொண்டைக்குழி வழியே
வாயசைவின்றி விழுங்கப்பட்டன!

பிறர் துன்பம் பொறுக்காத
சிறுவனாய் . . . தம்பியாய் . . .
தமிழ்த் தேசியத்தின் தலைவனாய் . . .

எங்கள் காவற் தெய்வங்கள்
எத்தனை இரவுகள் கண் விழித்தனர்!
துயரமும் தீக்குளிப்பும்
இன்னுயிர்த் தற்கொடையும்
எதிரியிடம் சித்திரவதைகளும் . . .
எங்களுக்காய்
எத்தனை தடவைகள்
உடலிலிருந்து ஒவ்வொன்றாய்
தானம் செய்தனர் . . .!

சிம்மாசனம் வீற்றிருந்த சந்திரிகா
சாமரம் வீசிய தமிழ்த்
துரோகத்தின் சின்னங்கள்
'வெற்றி நிச்சயம்' படை நகர்த்தலுக்கு
சங்கொலித்த அனுருத்த.

கஜ ரத துரக பதாதிகளாய்-
விமானப்படை, கடற்படை, தரை
நகர்வுப்படை,
அதிவிசேட பயிற்சி- அதிரடிப்படை,
ஆலோசனைகளில், அந்நிய நாட்டுப் படை,
ஆள் பற்றாக் குறைக்கு 'பொலிஸ்' படை,
பலியெடுப்புக்கு கௌரவ நாமம் சூட்டி
'ஜயசிக்குறு'.
கொட்டும் குளவிகள்
கூடுவிட்டுப் புறப்பட்டன.
வீடு, கோயில், பாடசாலையென
வேட்டையாடப் பறந்தன.

பண்டாரவன்னியன்
வாழ்ந்த மண்ணது
பகைவன் பாதங்கள்
மிதித்தல் பொறுப்பதா?
செழித்த வயல்கள்
மதர்த்த சோலைகள்
காய்த்துச் சிரித்த தோட்டங்கள்
துரோகிகள் காலடியை சகிப்பதா?

வீறுடன் எழுந்த தமிழர்படை,
ஊர்மனைகள் உறங்கும் நேரம்
கூர்விழிகள் குறிபார்த்தன.
எதிரியின் உயிர்நிலையம் விறைத்தது.
'ஐயே. . .! மஹரி அம்மே. . !' ஓலங்கள்
தாண்டிக்குளம் அதிர்ந்தது.
அரக்கனின் கோட்டைக்குள்
கரும் புலிகளா. . .?
புயலும் இடியும் மின்னலும்-
வரும் திசை தெரியாத பாய்ச்சல்.
வீரம் என்றால் என்னவென
தெரிந்து கொள்ளவும்
அவகாசம் எதிரிக்கு இல்லை.
மின்வெட்டும் கணத்திற்குள்
அருகிருந்த குழுவினரைக்
காணமுடியாத் தவிப்பு அவனுக்கு.
'எப்படி இவ்வளவு வேகத்தில்
வழித்தெடுக்க முடிகிறது?' -
அவன் பிரமித்துப் போனான்.
சிந்திக்க எதுவுமில்லை. . . ஓட்டம்
பிடிப்பதைத் தவிர.

எங்கள் தங்கையர் வீச்சில்
சந்திரிகாபடை பொசுங்கிப் போனது.

ஆயுதக் கிடங்குகளும்
எரிந்தே தீர்ந்தன.
நஞ்சுப் பொதி போட்ட
எம்.ஐ-24 நொருங்கிக் கிடந்தது.
சன்னதமாடிய யுத்த 'டாங்கிகள்'
தம்பியர் வீச்சில்
சாய்ந்து, சிதறின.
பலகாலம் புரிந்த
வெறியாட்டம் ஓய்ந்தது.
கூலிப்படையினர் பாடையில்
போயினர்.
'வெற்றி நிச்சயம்
யாருக்கடி அக்கா?'
'வாண்டுப்' பருவம் ஒன்று
கேட்டுச் சிரித்தது.
கிழடுகள், குஞ்சுகள்
சேர்ந்து சிரித்தன.
தெய்வங்கள் முன்னே
தலைசாய்த்து வணங்கினர்.
சிந்திக்கத் துணியும்வரை
சந்திரிகா படைகளுக்கு
சித்தம் கலங்கிவிட இன்னும் இன்னும். . . .
இது தொடரும்.


**- வதனிலா**

☆ ☆ ☆ ☆

## என் அன்புத் தமிழினமே!

எம் முற்றத்தில் எதிரியின்
'சப்பாத்து' முத்தம்
உறங்கியா கிடக்கிறாய் இங்கு
நீ நித்தம்
நம் பிள்ளைகள் நடத்திடும்
தர்மத்தின் யுத்தம்
வெல்ல நீ உழைத்திடு.
வெற்றி எம் பக்கம்.

**- இறைகுமரன்**


விடியலின் உயிர்ப்பு
மின்னி மறையும் கணப்பொழுது!
பூமியின் குலுக்களோடு
பிளந்த அதிர்வு!
வெடிகுண்டின் அணைப்பு
அறுபட்டு.
ரவையின் வேகமுடன்
உடலின் சிதறல்!
மண்ணின் கொதிப்போடு
பீறிட்டு தெறித்த
இரத்தக் குளியலில்
விடியலின் உயிர்ப்பு!
முடிவாய் உதிர்க்குஞ் சாம்பல்.
நெடுஞ்சாண் இடையில்
பேழையுறக்கம்
ஒன்றுமேயில்லை. . .
ஒன்றுமேயில்லை!
மனங்களில் உங்கள் முகங்கள்.
முடிவான இலட்சியம்
மறையும் போது. . .
உதிர்த்துவிட்ட புன்னகை,
கடைசியான கையசைப்பு
கண்களுக்குள் தேக்கிக்கொண்டு
நுரைதள்ளும் கடலலையைக்
கேட்டோம்
உங்கள் காற்தடங்கள் பட்டு
தேய்ந்துபோன
புற்களைக் கேட்டோம்
தூர விலகிய
தொடுவானைக் கேட்டோம்.
விழுதுகளாய் நிறைவரே.
உம்மைத்
தொழுது நிற்கின்றோம்.
பொழுது புலரும்
அழுத கண்கள் ஓயும்
அவை எம்மோடு அணிதிரளும்!
சுதாமதி
புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்